
# தோழன்

மார்ச் 2011



விலை ரூ. 10/-

மார்ச் 2011

# தோழன்

மலர் 52 இதழ் 3

ஆசிரியர்

அருள்பணி R. மரிய டெல்லஸ்

ஆசிரியர் குழு

அருள்பணி.தே. அல்போன்ஸ்
அருள்பணி. A. லூயிஸ்
அருள்பணி. G.ரோலிங்டன்
அருள்பணி. A.செபாஸ்டின்
அருள்பணி. A. ஜோமிக்ஸ்
பேராசிரியர் குழந்தைராஜ்
டாக்டர் A. புஷ்பராஜன்

ஆலோசகர் குழு

பேராசிரியர் G.A. கஸ்பார்
பேராசிரியர் M. முடியப்பன்

அலுவலகப்பணி

அருள்சகோதரி. பெரேரா

கணினிப்பணி

அருள்சகோதரி பெர்ட்டினஸ்

ஆண்டு சந்தா

| | |
|---|---|
| இந்தியா | : ரூ. 100 |
| இலங்கை | : ரூ. 400 |
| மலேசியா | : 70 வெள்ளி |

வெளியீடு

TNBCLC, திண்டிவனம்- 604 001

Tel: 04147 / **251227, 251337**
Fax: 04147 - **250779**
E-mail:tnbclctindivanam@yahoo.in

## உள்ளே!

1. ஆசிரியர் பக்கம் 1

2. பழைய ஏற்பாட்டில் மனமாற்றம் 2
**அருள்பணி. R.J. ரவிபாலன்**

3. தவக்காலம்
சிறப்பும் அழைப்பும் 10
**அருள்பணி. ரா.லூக்காஸ் ராஜ்**

4. சிலுவைப்பாதை 14
**அருள்பணி. இரா. மரிய டெல்லஸ்**
**சகோ. தேவசகாயம் பிரான்சிஸ்**

5. நீங்கள் மறைக்கல்வியாளர்களாகத் திகழ அழைக்கப்பட்டுள்ளீர்கள் 25

6. திருவழிபாட்டில் பண்பாட்டு மயமாக்கல் 28
**அருள்பணி. அ. செயபாலன்**

7. மறையுரை மொட்டுகள் 29
**அருள்பணி. வ. இரபேல்**

8. குறுக்கெழுத்துப்போட்டி 39

# ஆசிரியர் பக்கம்

காலமாற்றங்கள் மனித வாழ்க்கைக்கு தேவையான ஒன்று. கால மாற்றங்களுக்குள் இயற்கையில் ஏற்படும் மாற்றங்களால் இயற்கையில் உள்ள அனைத்தும் பழையதை களைந்துவிட்டு புதியதை அணிந்து கொள்கின்றன. புதிய மாற்றங்கள் வளர்ச்சியின் அடையாளம், பழைமையோடு கொண்ட உறவில் தேவையற்றதை உதிர்ப்பதற்கான அடையாளம். இந்த இயற்கையில் ஏற்படும் மாற்றங்களால் மனித வாழ்வும் புதிய பரிமாணங்களில் முன்னேற்றம் காண்கின்றது என்பதில் ஐயமில்லை.

தாய்த் திருச்சபையில் நம் அன்றாட வாழ்வோடு கலந்துள்ள திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களிலும் இந்த மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. திருவழிபாட்டில் தவக்காலம் என்பது கால மாற்றமாக மட்டுமல்ல, அதைவிட மேலாக அது இறையருளின் காலமாக நம்மைச் சந்திக்க வருகின்றது. தவக்கால சிறப்பிதழாக வரும் இம்மாத 'தோழன்' இதழில் மனமாற்றத்தின் கண்ணோட்டத்தை உங்களுக்காக அழகிய கட்டுரையாக அருள்பணியாளர் ரவிபாலன் படைத்துள்ளார். அருள்பணி. லூக்காஸ் ராஜ் அவர்கள் தவக்காலம் விடுக்கும் அழைப்பையும் அதன் சிறப்பையும் சுட்டிக்காட்டி நம்முடைய வாழ்வில் தவக்காலத்தைப் பயன்படுத்தி எவ்வாறு இறையனுபவம் பெறவேண்டும் என்ற எடுத்தியம்பியுள்ளார். இவ்விறையனுபவத்தை ஒவ்வொரு வாரமும் உள் வாங்கிக்கொண்டு வாழ அழகிய சிலுவைப்பாதை நமக்கு உதவுகிறது. கட்டுரைகளையும் சிலுவைப்பாதையையும் தந்த படைப்பாளர்களுக்கு நன்றி.

தவக்காலதில் நம்முடைய தனிப்பட்ட, குடும்ப, பங்கு வாழ்க்கையில் இறையருளில் வளர்ச்சியடையும் அதே காலக்கட்டத்தில் தமிழக சட்டமன்றத் தேர்தலுக்கான பிரச்சாரம் தொடங்கிவிடும். கட்சியைத் தொடங்கி சிலகாலமே ஆனாலும் ஆட்சியில் அமர்ந்து பணத்தைப் பெருக்கும் கூட்டங்கள் அதிகரித்து வருகின்றன. சமீப காலங்களில் தமிழகம் பல நிலைகளில் வளர்ச்சி கண்டுள்ளது என்பது உண்மை. ஆனால் மக்களின் முன்னேற்றம் என்பது ஒருசிலரின் முன்னேற்றமாகவும் ஒருசில கட்சிகளின் வளர்ச்சியாகவும் மட்டுமே உள்ளது என்பது வேதனை. தமிழகத்தை ஆட்சி செய்யும் கட்சியும் ஆள நினைக்கும் கட்சிகளும் போடும் போலி வேடங்களை மக்கள் புரிந்து கொள்வதே இல்லை. ஆட்சி மாற்றம் தேவை என்று உணர்வோர் யாருக்கு ஒட்டுப்போடுவது என்ற குழப்பத்தில் உள்ளனர். ஆட்சி மாற்றம் நல்லதல்ல என்று நினைப்போர் ஆளுங்கட்சிகளின் அடாவடித்தனம் மாறவேண்டும் என்று விரும்புகின்றனர். மாற்றங்கள் தேவை. அதை எல்லா சாமானியரும் மனித நேயத்துடன் வாழவும், உரிமையுடன் வாழவும் உதவும் மாற்றமாகவும் அமைய வேண்டும்.

கிறிஸ்தவ வாழ்வில் நாம் அனைவரும் இறை இயேசுவின் அனுபவத்தில் மாற்றம் காண்போம். தவக்காலம் முழுவதும் அதிக நேரம் ஒதுக்கி இறைவார்த்தை வாசித்து, செபித்து வளர்வோம். அதைவிட மேலாக நோயுற்றிருப்போர், தனிமையில் வாடுவோர் இவர்களை சந்தித்து ஆறுதல் தருவோம். நம்மிடம் உள்ளதைப் பகிரும் அளவு நம்முடைய ஒறுத்தல் முயற்சிகள் அமையட்டும்.

மாற்றம் கொண்டுவராத எதுவும் மனித வாழ்வுக்கு உகந்ததல்ல. மனிதத்தையும் இறைமையையும் புதுப் பொலிவாக்கும் அனுபவங்களை உள்வாங்கி வாழ முயற்சிப்போம்.

*என்றும் மாறாத தோழமையுடன்*

**அருள்பணி. இரா. மரிய டெல்லஸ்**

# பழைய ஏற்பாட்டில் மனமாற்றம்

## 1. முன்னுரை

பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் மனமாற்றம் பற்றியக் குறிப்புகள் பல இடங்களில் பரவிக் கிடப்பதை நாம் அறிவோம். யூத மற்றும் கிறிஸ்தவ சமயங்களில் ஆன்மிகம் மற்றும் விவிலியப் பாரம்பரியங்களில் மனமாற்றம் முக்கிய அம்சமாகக் கருதப்படுகிறது. மனமாற்றத்தைப் பல விதங்களில் விளக்கலாம் என்கிற உண்மை ஒருபுறம் இருந்தாலும், அதன் அடிப்படை உண்மை என்னவென்றால், மனமாற்றத்தைத் தன் உள்ளத்தில் உணர்கின்ற ஒருவர் தன் வாழ்க்கையில் மாபெரும் மாற்றத்தை அனுபவிக்கின்றார். அவரது வாழ்க்கைப் பயணத்தில் விவரிக்க முடியாத மாற்றத்தை அவரால் காண முடிகிறது. விவிலியப் பாரம்பரியத்தின் அடிப்படையில் நோக்கும்போது மனமாற்றத்தை இரண்டு விதங்களில் புரிந்துகொள்ளலாம். முதலாவதாக, பாவத்திற்காகவும், அதனால் ஏற்படும் உறவின் சீர்குலைவுக்காகவும் மனத்துயர் கொள்தல்; இரண்டாவதாக, உயிருள்ள உண்மையான இறைவனிடம் திரும்பிச் செல்லுதல். மனமாற்றம் என்பது ஒரு திருப்பமாக அறியப்படுகிற போது, அந்தத் திருப்பத்தைக் கடவுளிடமும் மனிதரிடமும் பார்க்க முடிகிறது. மனமாற்றத்தின் காரணமாக ஒருவர் தன் தவறானப் பயணத்திலிருந்து திரும்புகிறபோது, இறைவனும் பெருந்தன்மையோடு மனம் திருந்தும் மனிதனிடம் திரும்பி, அவனுக்கு ஆவன செய்கிறார் (காண்க இச 13:17; யோசு 24:20; திபா 51:13; 85:3; எசா 6:10). இந்த அப்படையில் மனமாற்றத்தை இருவழிப் பாதையாக எடுத்துக் கொள்ளலாம். மனமாற்றத்தின் காரணமாக, ஒருவர் தன் அணுகு முறையை மட்டும் மாற்றிக் கொள்வதில்லை; மாறாக தன் வாழ்க்கைப்பாதையையும் ஏன், தன் வாழ்க்கை முழுவதையும் மாற்றிச் சீரமைத்துக் கொள்கிறார்.

## 2. மனமாற்றம் என்றால் என்ன?

பழைய ஏற்பாட்டில் மனமாற்றம் என்கிற அர்த்தம் கொடுக்கும் 'ஷூப்' (Shub) என்கிற எபிரேய வார்த்தை பயன்படுத்தப் படுகிறது. இவ்வார்த்தை கிரேக்க மொழியில் 'மெத்னோயா' (Metanio) என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. 'ஷூப்' என்கிற வார்த்தை பழைய ஏற்பாட்டின் எபிரேய மூல நூலில் 1059 முறை பயன்படுத்தப் பட்டுள்ளது. ஆனால் பழைய ஏற்பாட்டின் முதல் கிரேக்க

மொழிபெயர்ப்பாகிய எழுபதின்மர் நூலில் (Septuuagint) 'மெத்னோயா' என்கிற சொல் குறைவான எண்ணிக்கையில் பயன்படுத்தப் பட்டுள்ளது. 'ஷூப்' என்றால் வழக்கமான பாதையிலிருந்து முழுவதுமாகத் திரும்பி, கடவுளை நோக்கிப் பயணம் செய்தல் என்று பொருள் கொள்ளப்படுகிறது. மேலும் கடவுளுடன் இணைந்து செயல் பட்ட ஒரு நபர், தான் செய்த



பாவத்தின் காரணமாக அவரிடமிருந்து விலகி வாழ்ந்து, பின்பு, தன் தவறை உணர்ந்து, வருந்தி, மீண்டும் கடவுளிடம் திரும்பிச் செல்லுதல் என்கிற அர்த்தத்தையும் 'ஷூப்' என்கிற வார்த்தைத் தருகிறது (காண்க திபா 51:13; 85:1-3). மேலும் மனம் மாறுதல் என்றால் பாவத்திலிருந்து விலகி வருதல் என்றுமட்டும் பொருளல்ல; பாவிகளின் கூட்டத்திலிருந்து விலகி வருதல் மற்றும் தீமையை ஒதுக்கித் தள்ளுதல் என்றும் பொருள் கொள்ளலாம். இக்கருத்து பழைய ஏற்பாட்டில் பல இடங்களில், வெவ்வேறு வார்த்தைகள் மற்றும் பதங்களைப் பயன்படுத்திக் குறிப்பிடப்பட்டுள்ளது. "நன்மை செய்ய கற்றுக்கொள்ளுங்கள். நீதியை நாடித் தேடுங்கள்" (எசா 1:17; ஆமோ 5:14-15); "இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவரிடம் உங்கள் இதயங்களைத் திருப்புங்கள்" (யோசு 24:2); "உங்கள் உள்ளத்தை விருத்தசேதனம் செய்துகொள்ளுங்கள்" (இச 10:16; எரே 4:4).

மனமாற்றத்தின் அடிப்படை இறைவனுக்கும் மனிதருக்கும் இடையே நிலவும் உறவு. முதலாவது, பாவம் செய்கிற மானிட இனம் கடவுளிடமிருந்து விலகி இருக்கிறது. அதனால் அமைதியின்றித் தவித்துக் கொண்டிருக்கிறது; உறவு சீர்குலைந்ததன் காரணமாக மகிழ்ச்சி மங்கிப் போய்விடுகிறது; ஆகவே மீண்டும் இறைவனிடம் திரும்பி வரவேண்டியதொரு கட்டாயம் ஏற்படுகிறது. இரண்டாவது, மனமாற்றம் கடவுளால் உந்தி விடப்படுகிறது; அவர்தான் மானிடர் மீது அன்பையும், கருணையையும், இரக்கத்தையும் பொழிந்து, அவர்களுக்கு மீட்பின் செய்தியை அருளி, மனமாற்றத்திற்கு அடித்தளம் அமைத்துத் தருகிறார். கடவுள் மானிடரை மனமாற்றத்திற்கு அழைப்பது, அவர் தரும் நற்செய்தியாகப் பார்க்கப்படுகிறது. மூன்றாவது, உண்மையான மனமாற்றம் மனிதர் தரும் பதிலில்தான் அடங்கியுள்ளது. கடவுளின் இரக்கத்தையும் அன்பையும் உள்ளத்தில் உணர்ந்து, தங்கள் பாவங்களுக்காக மனத்துயர் கொண்டு, கடவுளிடமும், பிற மனிதரிடமும் சொல்லாலும் செயலாலும் அன்பினைக் காட்டி, கடவுளிடமிருந்து மன்னிப்பைக் கேட்டுப் பெறவேண்டும்.

## 3. தனிப்பட்ட நபரின் மன மாற்றமா அல்லது இஸ்ரயேல் சமூகத்தின் மனமாற்றமா?

இஸ்ரயேலரின் எண்ணப்படி, மனமாற்றம் ஒரு தனிப்பட்ட நபருக்கு மட்டுமல்ல; மாறாக அது இஸ்ரயேல் மக்கள் அனைத்துத் தரப்பிற்கும் தேவையானது. ஏனென்றால் கடவுள் அவர்களை ஓரினமாகத் தேர்ந்தெடுத்து, தம் அன்புறவை வெளிப்படுத்தி, மோசேயை நடுநிலையாளராகக் கொண்டு, சீனாய் மலையில் அவர்களுடன் உடன்படிக்கையை ஏற்படுத்தினார். சீனாய் உடன்படிக்கை கடவுளுக்கும் இஸ்ரயேலுக்கும் இடையே இருந்த உறவுக்கு மிகச் சிறந்ததோர் அடையாளமாகத் திகழ்ந்தது. மக்கள் பாவம் செய்தபோது, கடவுளுடன் அவர்களுக்கு இருந்த உறவு தகர்ந்தது. உறவு முறிந்த நிலையில் இருந்த அவர்கள் கடவுளுடன் கொண்டிருந்த உடன் படிக்கையை உதறித் தள்ளியவர் களாகத்தான் கருதப்பட்டார்கள். இறைவாக்கினர்கள் உடன்படிக்கையை மையப்படுத்தி, தங்களின் படிப்பினைகளை மக்களுக்கு வழங்கினர். ஒவ்வொரு இஸ்ரயேலனும் கடவுளுக்கும் தங்கள் இனத்திற்குமிடையே இருக்கும் உடன்படிக்கை உறவினை எண்ணிப் பார்க்க வேண்டிய அவசியம் இருந்தது. சில நேரங் களில் தனிப்பட்ட நபரின் மனமாற்றம் வலியுறுத்தப்பட்டது என்பதில் சந்தேகமில்லை. உரியாவுக்கும், பத்சேபாவுக்கும் எதிராக தாவீது கொடூரமான பாவம் புரிந்தபோது, நாத்தான் இறைவாக்கினர் கடவுளின் பிரதி நிதியாகச் சென்று, தாவீது மனம் மாறுவதற்குக் காரணமாக இருந்தார் (2 சாமு 12). வேற்றினத்தைச் சேர்ந்த தனிப்பட்ட சில நபர்கள் மனம் மாறி, இஸ்ரயேலின் கடவுளை ஏற்றுக் கொண்டனர். இக்கருத்தினைக் கூறும்போது ரூத்துவை சிறந்த உதாரணமாக நாம் எடுத்துக் கொள்ளலாம் (ரூத் 1:16-18). ஆனால் பொதுவாக இஸ்ரயேல் மக்களின் வரலாற்றைப் பார்க்கும் போது மனமாற்றம் என்பது 'இஸ்ரயேலர்' என்கிற சமுதாயக் கூட்டத்திடம் இருந்துதான் வெளிப்பட வேண்டும் என்கிற நிலை இருந்தது.

### தஞ்சையில் இளைஞர்களுக்கு விவிலியக் கருத்தரங்கு

கடந்த 5–6 பெப்ரவரி 2011–இல் தஞ்சை மறைமாவட்ட இளைஞர் களுக்கு விவிலியக் கருத்தரங்க நடத்தப்பட்டது. "விவிலியமும் இளைஞர்களும்" என்ற தலைப்பில் நடத்தப்பட்ட கருத்தரங்கில் நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றனர். கருத்தரங்கை ஏற்பாடு செய்த அருள்பணி. ஜான்சன் மற்றும் அருள்பணி. டேவிட் மற்றும் மேய்ப்புப்பணிப் பொறுப்பாளர்கள் அனைவருக்கும் நன்றி.

## 4. பழைய ஏற்பாட்டில் மனமாற்றம்

கடவுளுக்கும் மானிடருக்கும் இடையே நிலவும் உறவு பல காரணங்களினால் உடைத் தெறியப்படுகிறது. உடைந்த உறவினைச் செப்பனிட விரும்பு கின்றவர் தீமையையும், தீயவற்றை

யும் உடைத்தெறிந்துவிட்டு, கடவுளிடம் தன் உறவை மீண்டும் புதுப்பித்துக் கொள்ள வேண்டும் என்கிற படிப்பினை பழைய ஏற்பாட்டில், குறிப்பாக இறைவாக்கினர்களின் போதனையில் வலியுறுத்தப்படுகிறது.

### 4.1. இறைவாக்கினர்களின் போதனையில் மனமாற்றம்

#### *4.1.1. முந்தைய இறைவாக்கினர்கள் (Former Prophets)*

பண்டைக்கால இறைவாக்கினர்கள் மனமாற்றத்தின் அவசியத்தை அடிக்கடி வலியுறுத்தினர். பாவத்தின் காரணமாகத்தான் எதிரிகளின் கையில் மக்கள் சிக்கித் தவிக்கிறார்கள் என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். பெலிஸ்தியர்களிடம் அல்லலுற்றிருந்த மக்களிடம் பேசிய சாமுவேல் இறைவாக்கினர் ஆபத்தைத் தவிர்க்க வேண்டுமென்றால், மக்கள் வேற்று தெய்வத்தை உதறிவிட்டு, ஆண்டவருக்கு மட்டும் ஊழியம் செய்யவேண்டும் என்று வலியுறுத்திப் பேசினார்; மக்களும் மனம் மாறினர் (1 சாமு 7:2-4). இறைவனின் சார்பில் மிகத் துணிவுடன் தாவீதின் பாவத்தை நாத்தான் இறைவாக்கினர் சுட்டிக் காட்டியவுடன், தாவீது "நான் ஆண்டவருக்கு எதிராகப் பாவம் செய்துவிட்டேன்" (2 சாமு 12:13) என்று தன் பாவத்தை வெளிப்படையாக ஏற்றுக்கொண்டு மனம் மாறுவதைப் பார்க்கும்போது, இஸ்ரயேலின் இறைவாக்கினர்கள் மனமாற்றத்தை எந்த அளவு வலியுறுத்தினார்கள் என்பதை நம்மால் உணர்ந்துகொள்ள முடிகிறது. கடவுளும் தாவீதின் மனமாற்றத்தை ஏற்றுக்கொண்டு, அவரை மன்னித்துவிட்டார். இந்நிகழ்வு நமக்குத் தெரிவிக்கும் உண்மை என்னவென்றால், தாவீதின் மனமாற்றத்திற்கு ஏற்பாடு செய்தவர் கடவுள்; அவர்தான் நாத்தானை தாவீதிடம் அனுப்பினார் (2 சாமு 12:1). கி.மு. 9-ஆம் நூற்றாண்டில் வடநாடாகிய இஸ்ரயேலில் இறைவாக்குரைத்த எலியா, பாகால் என்கிற வேற்றின தெய்வத்தின் பின்னால் சென்று



கொண்டிருந்த தம் மக்களை மனம் மாறச் செய்யுமாறு கர்மேல் மலையில் உயிருள்ள உண்மை இறைவனிடம் செபிப்பதைப் பார்க்கிறோம் (1 அர 18:37).

#### *4.1.2. பாபிலோனின் அடிமை நிலைக்கு முன்*

இஸ்ரயேலின் வரலாற்றில் மக்களுக்கு அதிகமான அவமானத்தைத் தந்தது பாபிலோனின் அடிமை நிலைதான் என்று சொன்னால் அது மிகையாகாது. பாபிலோனின் அடிமை நிலைக்கு முன் ஆமோஸ், ஓசேயா, எசாயா, மீக்கா, எரேமியா, எசேக்கியேல் போன்ற இறைவாக்கினர்கள் மக்களை மனம் மாறி தங்கள் தீச்செயல்களுக்கு முற்றுப் புள்ளி வைத்து, கடவுளுடன் அவர்கள் கொண்டிருந்த உடன்படிக்கை

உறவினைப் புதுப்பித்துக் கொள்ளு மாறு அழைப்பதைப் பார்க்கிறோம். மனம் மாற விரும்பாத இஸ்ரயேலரின் பிடிவாதத்தைச் சுட்டிக்காட்டி, தன் மன வருத்தத்தை ஆமோஸ் அவர்களுக்குத் தெரிவிக்கிறார் (ஆமோ 4:6-19). கடவுளுக்கும் இஸ்ரயேலருக்கும் இடையே நிலவிய உடன்படிக்கை அன்பு, திருமண அன்பிற்கு ஈடாக எண்ணப்பட்டது. இக்கருத்தினை 8-



ஆம் நூற்றாண்டில் வடநாடாகிய இஸ்ரயேலில் இறைவாக்குரைத்த ஓசேயாவும், கி.மு. 6-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தென்னாடாகிய யூதாவில் இறைவாக்குப்பணி புரிந்த எரேமியாவும் வலியுறுத்துகின்றனர். ஓசேயாவும், எரேமியாவும் பாவத்தை 'விபசாரம்' என்று அழைக்கின்றனர்.

இஸ்ரயேல் மக்கள்மீது கடவுளுக்கு இருக்கும் நியாயமான உரிமையின் காரணமாக, பாவம் என்றாலே அது கடவுளின் உரிமை யைப் பறிக்கும் செயல் என்கிற எண்ணத்துடன் இறைவாக்கினர்கள் செயல்பட்டனர். ஆகவே சிலை வழிபாடு, பத்துக் கட்டளைகளுக்குப் பணியாதிருத்தல், இறை ஆவியால் தூண்டப்பட்டுச் செயலாற்றும் இறைவாக்கினர்கள் வழங்கும் செய்திகளைக் கேட்காமலிருத்தல் போன்றவை பெரிய பாவங்களாகக் கருதப்பட்டன. இத்தகைய பாவங்களினால் பழுதடைந்த மக்கள் கடவுளின் கருணை, இரக்கம் மற்றும் அன்பைப் பெற்று, கடவுளின் தண்டனையிலிருந்தும், பேரழிவிலிருந்தும் மக்கள் தங்களைக் காத்திட வேண்டு மென்றால், அவர்கள் மனம் மாற வேண்டும் என்பது இறைவாக்கினர் களின் அறிவுரை (ஓசே 5:8-9; 7:10-12; ஆமோ 3:11-15; 5:27; எசா 5:26-30; 8:6-8; எரே 1:13-15). மனமாற்றம் என்றால் வெளிவேட மின்றி உள்ளத்தின் மாற்றத்தை உணர்த்துவதுதான் என்பது இறைவாக்கினர்களின் கருத்து. கடவுள் எதிர்பார்ப்பதை அறிந்து, தன் பாவங்களை அறிக்கையிட்டு, கடவுளுக்கு முழுவதுமாகக் கீழ்ப்படிந்து நடந்து, அவர்மீது முழு நம்பிக்கையையும் விசுவாசத் தையும் வளர்த்துக்கொண்டு, அவரிடம் சரணடைவதுதான் முழுமையான மனமாற்றம் என்று இறைவாக்கினர்கள் போதிக்கின்றனர் (எசா 1:11-20; 30:15-18; எரே 7:3-28; ஓசே 6:1-6; ஆமோ 5:21-25; மீக் 6:6-8).

### *4.1.3. பாபிலோனிய அடிமைநிலைக் காலம்*

எரேமியா, எசேக்கியேல் ஆகிய இறைவாக்கினர்கள் பாவத்தினால் பாழாய்ப்போன இஸ்ரயேலர்மீது இரக்கம் கொண்டு, அவர்களுக்கு

ஆறுதல் சொல்லும் விதத்தில் அவர்கள் மனம்மாறிட கடவுள் அவர்களுக்கு உதவுவார் என்று போதிப்பதைக் காணலாம். எரேமியா அறிவித்த புதிய உடன்படிக்கைப் பற்றியச் செய்தியில், கடவுள் மக்களின் பாவங்களை மன்னிப்பதோடு நிற்காமல், அவரது சட்டத்தை மக்கள் தெளிவாகப் புரிந்துகொண்டு, பிரமாணிக்கத்துடன் அதைக் கடைப்பிடிக்க உதவும் விதத்தில், அவர்களின் இதயத்தில் சட்டத்தை எழுதப்போவதாக வாக்களிக்கிறார் திருச்சட்டத்தை கடைப்பிடிக்க வேண்டிய அவசியத்தையும் உணர்த்துகிறார் (எசே 18:5, 9; 20:11-12; 22:8; 26). எருசலேம் கோவிலில் பணிபுரிந்த ஒரு குரு என்கிற அடிப் படையில். அவர் மிக உறுதியுடன் திருச்சட்டத்தை வலியுறுத்தி இருக்கலாம். பாபிலோனின் அடிமை நிலைக்கு முன் மக்கள் அவர்களாகவே மனம் மாறி வர வேண்டும் என்று வலியுறுத்திப் பேசிய எசேக்கியேல் (எசே 18:31), பாபிலோனின் அடிமை நிலையின்

## திண்டிவனம் கொன்சாகா சாலோம்
## மாநில சகோதரிகளுக்குப் பயிற்சி

2011 சனவரி 21 வெள்ளிக்கிழமை அன்று திண்டிவனம் கொன்சாகா சாலோம் மாநில அன்னை இல்லத்தில் மறைக்கல்விப் பயிற்சி அளிக்கப்பட்டது. கல்விப்பணி, சமூகப்பணி மற்றும் நலப்பணி புரியும் 26 சகோதரிகள் கலந்துகொண்டனர். தமிழக மறைக்கல்விச் செயலர் அருள்பணி. செபஸ்தியான் வழிநடத்தினார். மாநில அன்னை சகோ.ஜெசி பயிற்சிக்கான ஏற்பாடுகளைச் செய்ததோடு முழுமையாகப் பங்குபெற்று சகோதரிகளை உற்சாகப்படுத்தினார்.

அருள்பணி. ஆ. செபஸ்தியான்

(எரே 31:31-34; மேலும் காண்க எரே 24:7; 32:39). மனமாற்றம் என்பது தனிப்பட்ட நபரைச் சேர்ந்தது என்கிற கருத்தை எரேமியா அதிகமாக வலியுறுத்துகிறார். இந்தக்கருத்தினை புதிய உடன்படிக்கை யைப் பற்றி அவர் கூறும் பகுதியில் காணலாம் (எரே 31:31-34; மேலும் காண்க எரே 18:11; 25:5; 35:15; 36:3). எசேக்கியேலும் இதே படிப்பினையைத் தருவதைக் காணலாம் (எசே 18; 33:10-20). பொதுவாக எசேக்கியேல் புற மாற்றத்தைக் காட்டிலும் அக மாற்றத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, மக்களை மனம் மாற அழைத்தாலும், சில இடங்களில் அவர் போது மக்களின் கடின இதயங்களை ஆண்டவர்தாமே மாற்றி, தங்கள் பாவங்களுக்காக அவர்கள் மனம் மாறிட அவர் தூண்டுவார் (எசே 36:15-18) என்று கூறுகிறார். பாபிலோனின் அடிமை நிலை காலத்தின்போது (கி.மு. 598-538) இறைவாக்குரைத்த இரண்டாம் எசாயா (எசா 40-45) அடிமைகளாகத் தவித்துக் கொண்டிருந்த மக்களுக்கு ஆறுதல் கூறுவதற்கு அதிகமாக முனைந்தபடியால், மனமாற்றத்தைப் பற்றி அவர் தம் நூலில் ஒருசில இடங்களில் மட்டும்தான் குறிப்பிட டுள்ளார். (எசா 44:21-22; 55:6-7).

### 4.1.4. பாபிலோனி அடிமை நிலைக்குப் பின்

பாபிலோனிய அடிமை நிலைக்குப்பின் இறைவாக்கு உரைத்த மூன்றாம் எசாயா (எசா 56-66), யோவேல், செக்கரியா, மலாக்கி, தானியேல் போன்ற இறைவாக்கினர்கள் திருச்சட்டம், சமயச் சடங்குகள், திருவெளிப் பாட்டு கருத்துக்கள் போன்றவற்றை வலியுறுத்தி, மக்களை மனம் மாறி வாழத் தூண்டினார் (காண்க செக் 3:4-4, 14-19; 12:20-13:1; எசா 53:3-7, 13; யோவே 2:12-17; மலா 32:3; 23-24; தானி 9:4-19). பாபிலோனிய அடிமை நிலைக்குப் பின் இஸ்ரயேல் மக்கள் தங்களுக் கென்று அரசரைப் பெற்றிருக்க வில்லை. வேறு நாட்டினர் அவர்களை ஆட்சி செய்யும்போது அவர்களுக்கென்று ஓர் அடையாளத் தலைமை தேவைப்பட்டது. அந்த அடையாளத் தலைமையை எருசலேம் ஆலயம், திருச்சட்டம் ஆகியவற்றோடு இணைந்து, இஸ்ரயேல் குருக்கள், மறைநூல் அறிஞர்கள் ஆகியோர் வழங்கிக் கொண்டிருந்தனர். ஆகவே அக் காலக்கட்டத்தில் மக்கள் திருச் சட்டத்திற்கு அதிக மரியாதை தந்து, அதை கடைப்பிடிக்க அதிக ஆர்வம் காட்டினர். தங்களின் தனித் தன்மையைக் காப்பதற்காக, இறை வாக்கினர்களும் சட்டத்தை வலியுறுத்தி, அதை ஏற்க தவறிய மக்களை நேரிய வழிக்க வருமாறு அழைத்தனர்.

### 4.1.5. மனம் மாறிட பிற இனத்தாருக்கு வழங்கப்பட்ட இறைவாக்கு

இறைவாக்கினர் யோனா கி.மு. 8-ஆம் நூற்றாண்டின் முன் பாதியில் இறைவாக்குப்பணி செய்திருக்கலாம் என்று நம்பப் படுகிறது. அவர் நினிவே என்கிற பிற இனத்தார் வாழும் நகரத்திற்கு மனமாற்றத்தின் நற்செய்தியை அறிவிப்பதற்காக அனுப்பப்பட்டார். அனைவரும் தீய வழிகளை விட்டு விலக வேண்டும் (யோனா 3:8)என்று யோனா அறிவித்தவுடன், மக்கள் மனம் மாறினர். அவர்கள் மனம் மாறிய காரணத்தினால், கடவுளின் இரக்கத் தைப் பெற்றனர். பிற இனத்தவராய் இருந்தபோதிலும், நினிவே நகரத்து மக்கள் மனம் மாறியதனால் கடவுளின் அன்புக்கு ஆளானார்கள். மனமாற்றத் தினால் இஸ்ரயேலர் மட்டுமல்லாது, பிற இனத்தவரும் கடவுளின் அன்பையும், இரக்கத்தையும் பெறுவர் என்பது யோனாவின் இறைவாக்குப் பணியிலிருந்து அறிந்துகொள்ளப் படுகிறது. ஏறக்குறைய யோனாவின் காலத்தில் இறைவாக்குப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த எசாயாவின் போதனையிலும் பிற இனத்தாரின் மனமாற்றம் பற்றிக் கூறப்படுவதைப் பார்க்கிறோம் (காண்க எசா 19:21-25). பிற இனத்து நாடுகளாகிய எகிப்தும், அசீரியாவும் மனமாற்றம் பெற்று, ஒருவருக்கொருவர் சமாதானத்துடன் செயல்படுவர் என்பது எசாயாவின் இறைவாக்கு.

### 4.2. அறிவுரை (அ) ஞான நூல்களில் மனமாற்றம்

இனிமைமிகு பாடல்களில் கடவுள் மணமகனாகவும், இஸ்ரயேல் மணமகளாகவும் வருணிக்கப்படு கின்றனர். கடவுளைத் தேடும் பாவி அவரைக்காணமுடியாமல் தவிக்கிறான்; ஆனால் பாவி தன் பாவங்களுக்காக மனம் வருந்தும்போது, அவனால் கடவுளைக் காண முடிகிறது என்கிற கருத்து இறைவாக்கு நூல்களில் வலியுறுத்தப்படுவதைப்போல (எரே 29:11-14; ஓசே 3:5; 5:6, 15;

## கோவையில் மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான சிறப்புத் தியானம்

2011 பிப்ரவரி 5 சனிக்கிழமை அன்று கோவை ஜீவஜோதி மேய்ப்புப்பணி மையத்தில் ஆசிரியர்களுக்கான சிறப்புத் தியானம் நடைபெற்றது. இதில் 94 இருபால் ஆசிரியப் பெருமக்கள் கலந்துகொண்டு பயன் பெற்றார்கள். தமிழக மறைக்கல்விச் செயலர் அருள்பணி. செபஸ்தியான் வழிநடத்தினார். இதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் அருள்பணி.ததேயுஸ் அமலதாஸ் சிறப்பாகச் செய்திருந்தார்.

**அருள்பணி. ஆ. செபஸ்தியான்**
*தமிழக மறைக்கல்விச் செயலர்.*

ஆமோ 8:12). இனிமைமிகு பாடல்களிலும் வலியுறுத்தப்படுகிறது (இபா 3:1-2; 5:6). இதே கருத்தினை நீதிமொழிகள் நூலிலும் (நீமொ 1:28), சாலமோனின் ஞான நூலிலும் (சாஞா 1:1-2; 6:12-14) காணலாம். இனிமைமிகு பாடல்களில், மணமகள் விழித்தெழ வேண்டும் என்கிற எதிர்பார்ப்பு பாடலின் தொடக்கத்தில் இருக்கிறது; மணமகனின் உதவி யுடன் அவள் விழித்தெழுந்ததாகச் சொல்லப் படுகிறது. இது இஸ்ர யேலரின் மனமாற்றத்தை நமக்கு உணர்த்து கிறது (இப 2:7; 3:5; 5:2; 8:4-5). பொதுவாக இறைவாக்கி னர்கள் மனமாற்றத்திற்காக மக்களை அழைப்பது வழக்கம். ஆனால் அறிவுரை நூல்களிலும் சில இடங்களில் இத்தகைய அழைப்பு வழங்கப்படுவதை நாம் அறிகிறோம் (யோபு 22:21-25; நீமொ 1:20-30). உண்மையில் யோபு நூலின் முடிவில், யோபு தன் பாவங்களுக்காக மனத்துயர் அடைவதைக் காணலாம் (யோபு 42:6). திருப்பாடல்களிலும் ஆங்காங்கே மனமாற்றத்தின் அவசியம் சுட்டிக்காட்டப்படுகிறது (திப 81:9-10; 95:8-9). சில பாடல்களில் பாவ அறிக்கை வெளியிடப்படுகிறது (திபா 32:5; 51:6; 69:6; 90:8; 143:2).

## 5. முடிவுரை

பழைய ஏற்பாடு மன மாற்றத்தின் முக்கியத்துவத்தைப் பல இடங்களில் குறிப்பிடுகிறது. கடவுளுக்கும் மானிடருக்கும் இடையே உருவாகியுள்ள உடன் படிக்கை உறவினை மானிடரின் பாவம் சீர்குலைப்ப தனால் பெரும் பாதிப்புகளும், பிரச்னை களும் ஏற்படுகின்றன என்றும், மானிடரின் மனமாற்றத்தின் காரணமாக உடைந்த உறவு மீண்டும் புதுப்பிக்கப்படுகிறது என்றும் மிகத் தெளிவாகப் பழைய ஏற்பாட்டில் பதிவு செய்யப் பட்டுள்ளது. கடவுளிடமிருந்து விலகிச் செல்வதோடு, தன் உள்ளத்தில் தனிமையை உணர் கிறான். அவன் மனம் மாறி திரும்ப வும் கடவுளிடம் திரும்பி வரும் போது, மன நிம்மதி அடைவ தோடு, தன் வாழ்வின் குறிக் கோளை அடையும் நம்பிக்கையும் பெறகின்றான். மாற்றம் ஒருவரின் வாழ்க்கை பயணத்தைச் சீராக்கி, உறவைப் பலப்படுத்துகிறது.

**அருள்பணி R.J. ரவிபாலன்**
*பூந்தமல்லி.*

# தவக்காலம்
# சிறப்பும் அழைப்பும்

அனைத்தையும் படைத்து நல்லதெனக் கண்ட (தொநூ 1:18, 25, 31) கடவுள், மானிடரைத் தமது உருவிலும் சாயலிலும் படைத்தார் (தொநூ 1:26,27). கடவுளால் படைக்கப்பட்ட மனிதன் பாம்பின் சூழ்ச்சியால் (சாத்தான்) பாவம் செய்தான் (தொநூ 3:8-13). பாவத்தினால் கறைபடிந்த மனுக் குலத்தை மீட்க விரும்பிய கடவுள் தமது மகனின் வழியாக சாத்தானின் சூழ்ச்சிக்கு முடிவு கட்டுவதாக வாக்களித்தார் (தொநூ 3:15). அந்த வாக்குறுதியின் அடிப்படையில், தான் தேர்ந்துகொண்ட மக்களை நேர் வழியில் நடத்திட, முதுபெரும் தந்தையர்கள் மற்றும் இறை வாக்கினர்கள் வழியாக பேசிய கடவுள் (எபி 1:1) தமது திட்டத்தை நிறைவேற்றவும் பாவத்தினால் சீரழிந்து கொண்டிருக்கும் மக்களின் மீது தாம் கொண்டிருக்கும் அன்பினை உறுதிப்படுத்தவும் தமது ஒரே பேறான இயேசுவையே அனுப்பினார், அளித்தார் (யோவா 3:16). கடவுளின் திருமகனாம் இயேசுவும், அவர்மீதும் அவரை அனுப்பியவர்மீதும் நம்பிக்கை கொள்பவர்களுக்கு நிலை வாழ்வு எனும் பரிசினை அளித்தார் (யோவா 3:15). இயேசுவையும் இயேசுவின் செய்தியையும் ஏற்றுக் கொள்ளாமல், செவிசாய்க்காமல், பாவம் செய்த இருளின் மக்கள், இயேசுவையே தீர்ப்பிட்டு சிலுவையில் அறைந்து கொன்றார்கள். வாழ்வின் ஊற்றும் அவரைப் பழித்துரைத்தார்கள். பாவத்திலிருந்து விடுவிக்க வந்த வரையே துன்பப்படுத்தினாலும், அவரின் காயங்களால் நாம் குணமடைந்திட, அவரது இரத்தத்தினால் நாம் தூய்மை யாகிட, நம்முடைய பாவ இயல்பை மறுத்து, ஒறுத்தல் செய்து இயேசு நம்மீது கொண்டுள்ள ஆழமான அன்பை அறியவும், அறிவதன் வழியாக அன்பு செய்யவும், அன்பு செய்வதன் வழியாக நம் வாழ்வு சிறக்கவும் உதவிடும் தவக்காலத்தின் மேன்மையை நினைவுபடுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமும் போக்குமாகும்.

## 1. அருளின் காலமாகும் தவக்காலம்

பொதுவாழ்வில் மூன்றே ஆண்டுகள்தான் இயேசு தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருந்தாலும், இயேசுவின் பாடுகளை உலகிற்கு எடுத்துரைக்கும் இயேசுவின் எருசலேம் திருப்பயணம், பிலாத்துவின் அரண்மனை நிகழ்வுகள், கல்வாரி மலைச் சிலுவைப் பாதைதான் தவக்காலத்தில் மிகமிக முக்கியத்துவம் பெறுகின்றன. வெற்றி ஆர்ப்பரிப்போடு இயேசுவைக் கழுதையின்மேல் அமர வைத்து அழைத்துச் செல்லப்படுகின்ற நிகழ்வும் அதில் "தாவீதின் மகனுக்கு ஓசன்னா! ஆண்டவர் பெயரால் வருகிறவர் போற்றப்பெறுக! உன்னதத்தில் ஓசன்னா!" (மத் 21:9) எனத் தொடங்கி இயேசுவை கல்லறையில் அடக்கம்

செய்யப்படுகின்றவரை தொடரும் நிகழ்வுகள்தான் அவையாகும். இந் நிகழ்வுகளை வெறுமனே அறிவுக் கண்ணோடு மட்டும் பார்த்து மறந்து விடாமல் அனுபவப்பூர்வமாக, உணர்வுப்பூர்வமாக அனுபவிக்கின்ற நிகழ்வாகவே இருக்க வேண்டிய காலமே தவக்காலம்.

- ஒவ்வொன்றிற்கும் ஒரு காலம் உண்டு (சஉ 3:1-8). காலங்கள் அவருடையன. யுகங்களும் அவருடையன. அவரே அனைத்தையும் படைத்தார். ஆண்டவரே நம்மைப் படைத்தவர் நாம் அவர் மக்கள் (திபா 100:3). படைக்கப்பட்ட மக்களாகிய நாம் நமது வாழ்வினை இயேசுவின், கடவுளின் வெளிப்பாட்டோடு நாம் வாழ்கின்றோமா? என்பதை அறிகின்ற காலமே தவக்காலம்.
- ஒவ்வொரு கடவுளின் திருவுளத்திற்கு ஏற்ப வாழ நாம் தவறிய தருணங்கள், இழந்த கடவுளின் அருள்கொடைகளை நினைத்துப் பார்த்து இழந்தவற்றைத் திரும்பப் பெற்றுக்கொள்கின்ற காலமே தவக்காலம்.
- எல்லாவற்றையும்விட நாம் மனிதர்கள், பாவம் செய்கிறவர்கள். பாவம் செய்பவர்களோடு வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். இப்படிப்பட்ட நம்மை பாவத்திலிருந்து மீட்கப் பிறந்த (மத் 1:22) துன்பப்படுத்தி, அவமானப்படுத்தி, இரத்தம் சிந்த வைத்து, கள்வனைப் போன்று சிலுவைமரத்தில் கொல்லப்பட்ட இயேசு. இறுதி வரை நம்மீது வெளிப்படுத்திய அன்பினை நினைவுகூர்ந்து இயேசுவின் அன்பில் ஐக்கியமாகின்ற காலமே தவக்காலம்.

இயேசுவின் பாடுகளை தியானித்து உணர்வுப்பூர்வமாகவும், அனுபவப்பூர்வமாகவும் அமைத்துக் கொள்ள 40 நாள்கள் தரப்பட்டுள்ளன. 40 நாள்கள் என்பவை ஒரு மாதத்தைக் கடந்து காணப்படுகின்றன என்று கணித்து முகம் சுளிப்பதைவிட, தந்தையாகிய கடவுள் தம் மக்களை நெறிப்படுத்த, ஒழுங்குபடுத்த, சீர்படுத்த கையாண்ட நாற்பது ஆண்டுகளைப்



போன்றது என்றும் (திபா 95:10), நெடிய பயணத்திற்காக தயாரிக்கப்பட்ட எலிசா அனுபவத்தைப் போன்றும் (1 அர 19:8), பொதுவாழ்வுக்கு முன்னதாக இயேசு மேற்கொண்ட பாலைவன அனுபவத்தைப் போன்றது (மாற் 1:13) என்பதை உணர்வோமேயென்றால் எத்துணை நலமானதாக இருக்கும்.

## 2. தவக்கால நெறிமுறைகள்

இயேசுவின் பாடுகளை தியானிக்கின்றவர்கள், நினைவுகூர்கின்றவர்கள் யாராக இருப்பினும் அதற்கு பதில்தர முடியாமல் இருக்க முடியாது. இயேசுவின் கல்வாரிப் பயணத்திற்காக ஒருவர் தருகின்ற பதில் மற்றவரிடமிருந்து வேறுபடலாம். ஒருவர் சிந்தனையளவில் என்றால், மற்றவர்

சொல்லளவில் அல்லது வேறொருவர் செயலளவில் இருக்கலாம். அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட விதத்தில்கூட ஒருவர் பதிலளிக்கலாம். ஆனால் எவரும் பதிலளிக்க முடியாமல் இருக்க முடியாது. நாம் தருகின்ற பதில் எப்படி இருந்தால் தவக்கால சிறப்பினை அனுபவிக்க முடியும் என்பதை இயேசுவின் வார்த்தைகளிலிருந்து கற்றுக்கொள்வோம்.

தவக்காலத்தில் அறச்செயல் களைக் குறித்து எச்சரிக்கையாக இருங்கள். ஏனெனில் நமது அறச் செயல்களுக்கு ஆசீர் கிடைப்பது ஆண்டவரிடமிருந்தே (காண்க மத் 6:1).

*1. தர்மம் செய்யுங்கள் :* ஆனால் நீங்கள் செய்யும் தர்மத்தைப்பற்றி தம்பட்டம் அடிக்காதீர்கள். உங்கள் வலக்கை செய்வது இடக்கைக்குத் தெரியாதிருக்கட்டும் (மத் 6:2-4).

*2. இறைவேண்டல் செய்யுங்கள்:* மக்கள் பார்க்க வேண்டும் என்று செபிப்பதைவிட இறைவன் உங்கள் உள்ளத்தைப் பார்த்திட செபியுங்கள். மிகுதியான சொற்களை அடுக்கிக் கொண்டு போவதல்ல செபம். மாறாக இயேசு கற்றுக்கொடுத்த செபத்தையே அதிகமாக பயன்படுத்துவோம் (மத் 6:5-15).

**3) நோன்பு இருங்கள்:** தவக்காலத்தின் பயனை அனுபவித்திட நோன்பு இருங்கள். நீங்கள் நோன்பு இருப்பது மற்றவர்கள் உங்களைப் பார்க்க அல்ல என்பதை உணருங்கள் (மத் 6:16-18). மேலும் இயேசுவின் பாடுகளை நாம் தியானிப்பதால், இயேசுவும் நாம் நோன்பு இருக்க வேண்டும் என்பதையே விரும்புகிறார் (காண்க மாற் 2:18-20).

## 3. வாழ்க்கையும் வழிபாடும்

வருடத்திற்கு ஒருமுறையாவது நல்ல பாவசங்கீர்த்தனம் (ஒப்புரவ அருளடையாளம்) கொண்டாட விரும்புகின்றவர்கள்கூட தவக் காலத்தைத்தான் தேர்ந்தெடுப்பார்கள். பெரிய வெள்ளிக்கிழமை சிலுவைப் பாதையில் பங்கேற்காத கிறிஸ்தவர் களை விரல்விட்டு எண்ணிவிடலாம். அதுவரை திருப்பலி வழிபாடுகளில் பங்கேற்காதவர்கள்கூட தவக்கால நாள்களில் பங்கேற்பதை எல்லா பங்குத்தந்தையர்களும் காண்கின்ற சிறப்பு நிகழ்வு. குடிமகன்களும் பிறரும் இயேசுவின் பாடுகளை நினைவுகூர்ந்து குடிப்பதை நிறுத்தி குடும்பத்தோடு ஒன்றித்திருக்கச் செய்யும் இக்காலம்தான் மிகச் சிறப்பான விதத்திலே வாழ்க்கையை யும் வழிபாட்டையும் இரண்டறக் கலக்கச் செய்யும் காலமாக உள்ளது. வழிபாடு என்பது வாழ்க்கையின் எல்லாக் கூறுகளையும் உள்ளடக்கியது. தவக்கால வழிபாடுகளில் பங்கேற் கின்றவர்கள் அனைவரும் வழிபாட்டின் வழியாக தங்களின் வாழ்க்கையில் மாற்றத்தை உணர்கின் றார்கள். வாழ்வின் நிகழ்வுகளை வழிபாடு களில் பங்கேற்கின்றவர்கள் சிந்தித்துப் பார்க்கின்றார்கள், சீர்திருத்திக் கொள்ள முயலுகின்றார்கள். தவறு களைத் திருத்திக்கொள்ளவும், தன்னிலை உணர்ந்து பாவ அறிக்கை செய்யவும் இயேசுவின் அன்பின் ஆழத்தை உணர்ந்திட வெள்ளிக் கிழமை மற்றும் இதர நாள்களில் நடைபெறும் சிலுவைப் பாதைகளில் பங்கேற்று பலனடைவது "வாழ்க்கையில் வழி பாட்டையும் வழிபாட்டில் வாழ்க்கை யையும்" இணைத்து கொண்டாடு கின்றார்கள் என்பதைத்தான் காட்டு கின்றது.

எனவே தவக்காலத்தை முன்னிட்டு நாம் மேற்கொள்ளும் தானதர்மங்கள், செப-தவ முயற்சிகள் பிறர் நம்மைப் பார்த்து பாராட்டு வதற்கல்ல.

- ❖ இயேசு நமக்கு வழங்கியுள்ள தவக்கால நெறிமுறைகளில் எதில் நாம் அதிகமாக கவனம் செலுத்தி வளர வேண்டும் என்பதைக் கற்றுக்கொள்வோம்.
- ❖ தவக்கால நெறிமுறைகள் தனி மனித நெறிப்படுத்தலுக்கு மட்டுமேயல்ல மாறாக தனி மனிதரின் வழியாக சமூக மாற்றத்திற்காகவும் என்பதை நினைவிற் கொள்வோம். உண்ணா நோன்பிருந்து நாம் மேற்கொள்ளும் செயல்கள் தேவையில் உள்ளவர் களுக்கு உதவுவதாக இருக்க வேண்டும்.

## 4. அனுபவங்கள் அர்த்தம்பெற

தவக்கால கொண்டாட்டங்களில் பங்கேற்கின்போது பல்வேறு அனுபவங் களை பெறுகின்றோம். திருநீற்றுப் புதன் தொடங்கிப் பெரிய சனிக்கிழமைவரை நடைபெறும் நிகழ்வுகள் தரும் அனுபவங் களும், அனுபவங்களால் கடவுள் நமக்குத் வெளிப்படுத்தும் வெளிப்பாடு களும் எண்ணிலடங்காதவை. கடவுள் தரும் அனுபவங்கள் நமது வாழ்வில் மாற்றமும் ஏற்றமும், புதிய ஆற்றலும் புதிய உத்வேகமும் தருவதால் நாம் பங்கேற்கும் நிகழ்வுகளை நினைவு கூர்வோம்.

- சிலுவைப்பாதை - வெள்ளிக்கிழமை தோறும் மற்றும் இதர நாள்களிலும்
- திருப்பலியில் பங்கேற்றல்
- திருவிவிலியம் வாசித்தல், தியானித்தல்
- நல்ல பாவசங்கீர்த்தனம் (ஒப்புரவு அருளடையாளம்) செய்தல்
- சுத்தபோசனமும் ஒருசந்தியும் அனுசரித்தல்
- ஒருவேளை உணவினை தவிர்த்து ஏழைகளுக்கு தர்மம் செய்தல்
- விருப்பமான உணவு வகைகளைத் தவிர்த்தல்
- குடிமகன்கள் குடிப்பதைத் தவிர்த்தல்
- தனித்திருந்து, விழித்திருந்து செபித்தல்
- தவறுகள் செய்யத்தூண்டும் சூழல்களையும் தவறுகளையும் தவிர்த்தல்
- பெற்றோருக்கும் பெரியோருக்கும் கீழ்ப்படிந்து நடத்தல்
- கடமைகளைச் சரிவரச் செய்தல், மற்றும் இவை போன்றவைகள்.

## முடிவாக

எந்த ஓர் அனுபவம், அனுபவிக்கின்றவரை நினைவில் நிலைக்கச் செய்து, மீண்டும் மீண்டும் நினைவுபடுத்தி புதிய எண்ணங் களோடு, புதிய ஆற்றலோடு செயல்படத் தூண்டுகிறதோ அந்த அனுபவம் வாழ்வின் போக்கையே மாற்றும் என்பது உண்மை. அந்த வகையில் தவக்காலத்தில் நமது இறை அனுபவங்கள் இறை-மனித உறவுக்கு புதிய வழிகாட்டுதலைத் தரட்டும். தவமுயற்சிகள் உள்ளத்தின் ஆழத்தில் பதியட்டும். தவக்காலம் வரம் தரும் காலம். வாழ்வை மேன்மைப்படுத்தும் காலம் என்பதை உணர்த்தட்டும். நமது முயற்சி களுக்கு ஆண்டவர் துணை செய்கிறார் என்ற நம்பிக்கை வளரட்டும். கல்வாரி நோக்கி சிலுவை சுமந்து இரத்தம் சிந்திய இயேசுவின் அன்பினை நமது தவமுயற்சிகள் நம்மை அனுபவிக்கச் செய்து வாழ்வாக்க உதவட்டும்.

**அருள்பணி. ரா. லூக்காஸ் ராஜ்**
*செயலர், விவிலியப் பணிக்குழு,*
செங்கல்பட்டு

# சிலுவைப்பாதை



சிலுவைப்பாதை - காலம் காலமாகச் செய்துவரும் பக்தி முயற்சிகளில் ஒன்று. தவக்காலம் என்றாலே ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் கிறிஸ்தவர்கள் ஆலயங்களை முற்றுகையிட்டு மிக உருக்கமாகக் கலந்துகொள்ளும் பக்தி முயற்சிதான் சிலுவைப்பாதை. சிலுவைப்பாதை இயேசுவின் பாடுகளின் இறுதிப் பயணம். இறை ஆட்சி என்னும் இலட்சியக் கனவை இதயத்திலும் வாழ்விலும் சுமந்து அதை மண்ணில் கொண்டுவர முயன்ற கடவுளின் மகனுக்குக் கிடைத்தப் பரிசுதான் இந்த சிலுவைப் பாதை. சிலுவை என்பது யூதர்களுக்கு அவமானத்தின் அடையாளமாகவும் தடைக்கல்லாகவும் இருந்த ஒன்று (*1 கொரி 1:23*). அச்சிலுவையை ஏற்றுக்கொண்டு மீட்பின் கருவியாக மாற்றினார் இயேசு கிறிஸ்து. அவமானத்தின் அடையாளத்தை வெற்றியின் அடையாளமாக மாற்றிய வெற்றியின் பயணம்தான் சிலுவைப்பாதை. இதை வெறும் ஆன்மிக நோக்கம் கொண்டு செய்து வாழ்வில் தொடர்பற்றதாக மாற்றிவிட வேண்டாம். மாறாக நம் வாழ்வில் கிறிஸ்துவின் மதிப்பீடுகளை உள்வாங்கி மனிதர்களாக வாழ கற்றுத்தரும் உயர்ந்த பாடமாக இந்த சிலுவைப்பாதையை செய்வோம்; செபித்து வாழ்வோம்.

## 1. குற்றவாளிகளின் கூண்டில்

குற்றவாளிகள் பலர் சேர்ந்து குற்றமற்ற இயேசுவை சிலுவைச்சாவுக்குத் தீர்ப்பிடுகிறார்கள். பிலாத்து உரோமை அரசின் பிரதிநிதியாக இருந்து மக்களை சுரண்டிய குற்றவாளி. ஏரோதுவோ தான் ஆடம்பரமாக வாழ, பதவியை தக்க வைத்துக்கொள்ள, உரோமானியர்களின் சொல்லுக்குத் தலையாட்டியவன். அத்துடன் மக்களைப் பல விதங்களில் துன்புறுத்திய குற்றவாளி. இவர்கள் அனைவருமே தங்களின் நலனுக்காக, பதவிக்காக குற்றங்கள் புரிந்து பலரையும் குற்றவாளிகளாகத் தீர்ப்பிட்டவர்கள். ஆனால் இயேசுவோ மக்களின் நலன் கருதி அயராது உழைத்தவர். அநியாய வரி வசூலிக்கும் உரோமானிய அரசை, மக்களின் நலனுக்காகக் கண்டனம் செய்தவர். காய்த்த மரத்திற்கே கல் எறியப்படுவதைப்போல் நன்மை செய்த இயேசுவுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் குவிந்தன. 'அவனைச் சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும்' என்று சருகுகள் சப்தமிடுகின்றன. காய்ந்த இலைகள் சலசலக்கின்றன. ஆனால் அதைத் தாங்கும் பூமியோ மௌனமாய் இருக்கிறது. குற்றமற்ற இயேசு குற்றவாளிகள்முன் மௌனியாக்கப்படுகின்றார். ஆடுகளை விடுவிக்க வந்த ஆயன் இயேசுவை, ஆடுகளே சிலுவையில் அறைய கூக்குரலிடுகின்றன. இன்றும் பலரையும் குற்றம்சாட்டி பதவியில் இருக்கும் மனிதர்கள் பலர் உண்டு. ஆதாயம் பெறும்வரை அன்புக்குரியவராகவும் ஆதாயம் கிடைக்காதபோது வெறுப்புக்கு உரியவராகவும் மாறும் அவலம் இன்றும் தொடர்கிறது. குற்றமற்றவர்களை குற்றவாளிகளாகத் தீர்ப்பிடும் நம்முடைய மனித இயல்பை மாற்ற முயல்வோம். பலரையும் தவறாகத் தீர்ப்பிட்டு வேதனைக்கு உள்ளாக்காமல் நல்ல கிறிஸ்தவர்களாய் வாழ்வோம்.

***செபிப்போம்:*** *சாவுக்குத் தீர்ப்பிடப்பட்ட அன்பு இயேசுவே, இன்று பொய்களின் சத்தம் உரக்கக் கேட்கின்றது. குற்றங்களை மறைக்க பிறரைக் குற்றவாளி எனத் தீர்ப்பிடும் மனநிலையை மாற்ற வரம் தாரும். நன்மையைப் பற்றிக்கொண்டு உம்மைப்போல வாழ அருள் தாரும். ஆமென்.*

## 2. சுமை தாங்கிகளாய்



இயேசு செவிடர்கள் கேட்கவும், பார்வையற்றோர் பார்க்கவும் ஊமையர் பேசவும், முடவர் நடக்கவும் செய்து பிறரின் பாரச் சுமையை மகிழ்ச்சியோடு சுமந்து நலம் தந்தார். பேய்களை விரட்டியும், வயிறார உணவளித்து வயிற்றுப் பசியைப் போக்கிய இயேசுவின்மீது சிலுவையைச் சுமத்துகிறார்கள். இதை எண்ணி இயேசுவுக்காகப் பரிதாபப் படுவோர் பலர் உண்டு. இன்றும் நாம் இயேசுவின் தோளின்மீது பாரமான சிலுவையை சுமத்திக் கொண்டுதான் இருக்கிறோம். பகட்டாக வாழவேண்டும் என்பதற்கு தங்கள் பெற்றோர்மீது வீணாக சிலுவைப் பாரத்தை ஏற்றும் மாணவர்கள். தங்களின் வசதியைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காக இலஞ்ச வழிகளைப்பின்பற்றுவோர் மக்கள்மீது ஏற்றும் சிலுவை. பொறுப்பற்ற நிலையில் நடந்துகொண்டு பிள்ளைகளின் எதிர்கலத்தை சீரழிக்கும் பெற்றோர் பிள்ளைகள்மீது ஏற்றும் சிலுவை. வரதட்சணைக் கொடுமையால் மணமகள்மீது மணமகன் ஏற்றும் சிலுவை... சொற்களாலே பிறரைக் காயப்படுத்தியும் பிறரின் வாழ்வைச் சீரழித்தும் நல்லவர்களின் வாழ்வில் நாம் ஏற்றும் சிலுவை... இப்படி அன்றாட வாழ்வில்ஆயிரம் ஆயிரம்... இன்று சுமைதாங்கிகளைவிட சுமைகளை சுமத்துவோரே அதிகம். நீங்களும் நானும் சுமைதாங்கிகளா? அல்லது பிறருக்குச் சுமைகளா?

***செபிப்போம்:*** *சிலுவையை ஏற்றுக்கொண்ட அன்பின் இயேசுவே, நீர் உலக மக்களை மீட்பதற்காகப் பாரமான சிலுவையை ஏற்றுக்கொண்டீர். இன்று நாங்கள் பலருடைய வாழ்வில் சிலுவையாக மாறியுள்ளோம். எங்கள் வாழ்வை மாற்றிக்கொள்ள வரம்தாரும். எங்கள் அன்றாடச் சிலுவைகளை சுமந்து கொள்ளவும் பிறருடைய சிலுவைகளைப் பகிர்ந்து கொள்ளவும் இறையருள் தாரும். ஆமென்.*

## 3. வீழ்ச்சி எழுச்சியாகட்டும்

இயேசு எருசலேம் வீதிகளில் சிலுவையைச் சுமந்து சென்ற அந்நேரம் சூரியக் கதிர்கள் மண்ணை வறுத்தெடுத்த நேரம். சூரிய வெப்பம் இயேசுவின் கண்களையும் மருளச் செய்தது. இயேசுவின் உடலையும், உடையையும் வியர்வையால் குளிப்பாட்டியது. அந்த வெப்பம் அவரை மயக்கமுறச் செய்தது, கீழே வீழ்த்தியது. வானமும் சூடு, மண்ணும் சூடு. இரண்டுக்கும் இடையில் மாட்டிக்கொண்டார் இயேசு. கலிலேயா, சமாரியா, யூதேயா முதல் பாலஸ்தீனம் முழுவதும் சுற்றி வந்த அவரது கால்கள் தடுமாறி கீழே விழவைத்தன. பாவத்தில் வீழ்ந்த விபசாரப் பெண்ணை வாழ்வில் எழுப்பி விட்டவருக்கா இந்த

வீழ்ச்சி. முடமானவரை எழுந்து நட என்று சொன்ன இயேசுவின் கால்கள் தள்ளாடின. ஆனால் அவரது மனதைரியம் அவரைச் சுற்றிநின்ற எண்ணற்ற எதிரிகளை வீழ்த்தியது. சமாரியர்களையும் பரிசேயர்களையும் சதுசேயர் களையும் தலைமைக் குருக்களையும் எதிர்த்து நின்ற அவரது துணிவு மீண்டும் அவரில் புகுந்து அவரை மீண்டும் எழுந்து நடக்கச் செய்தது. இன்றும் நாம் முடமாகிக் கொண்டிருக்கிறோம். வாழ்க்கையில் ஏற்பட்ட தோல்விகளை எண்ணி எண்ணியே துவண்டு கொண்டிருக்கிறோம். வியாபாரத்திலோ, விவசாயத்திலோ ஏற்பட்ட நஷ்டங்களையே எண்ணி அழுது விம்மிக் கொண்டிருக்கிறோம். தயங்குவோரும் அஞ்சுவோரும் இந்த உலகில் எந்தக் காரியத்தையும் செய்ய முடியாது. விரல் விழுந்துவிட்டால் அழுது கொண்டிருக்கக் கூடாது. நகம் வெட்டும் நேரம் மிச்சம் என்று நினைத்துக் கொள்ள வேண்டும். அப்போது நம் வாழ்வில் வீழ்ச்சி எழுச்சியாகும், பள்ளம் மேடாகம், தோல்வி வெற்றியாகும்.

***செபிப்போம்:*** *விழுந்தாலும் எழுந்து நடந்த அன்பின் இயேசுவே, எங்களது வாழ்வில் தடைகள் வரும்போது அவைகளைத் துணிவுடன் சந்தித்து, அவற்றை வெற்றிகொள்ள வரம்தாரும். வீழும்போதெல்லாம் வீழ்ந்த எழுந்த உம்மை மட்டுமே எங்கள்முன் கொண்டு வாழ இறையருள் தாரும். ஆமென்.*

## 4. உறவுகள் பலமாகட்டும்



தாய் மரியாவும் இயேசுவும் சந்திக்கும் உன்னதமான நேரம். இயேசு சிறுபிள்ளையாக இருக்கம்போது மரத்தை அறுக்கும்போது மரத்தூள் கண்ணில் விழுந்து விட்டதால் கண்ணில் ஊதிவிட்டுகண்கள் கலங்கியவர் இந்த மரியா. பிஞ்சுக் குழந்தையைக் கொடியவன் ஏரோதிடமிருந்து காப்பாற்ற தன் கஷ்டம் பாராமல் அடித்துப் பிடித்து கழுதையின்மேல் உட்கார்ந்து பல மைல்கள் பயணம்செய்து எகிப்தை அடைந்தவர். இயேசு காணாமல் போனபோது கால்கடுக்கத் தேடி அலைந்தவர். இயேசுவுக்காகத் தன்னையே மறந்தவர், தன்னையே உருக்கிக் கொண்டவர். இயேசுவின் பணிவாழ்வில் தன்னையே இணைத்துக் கொண்டவர் இந்த தாய் மரியா. கானா ஊரில் தண்ணீரைத் திராட்சை இரசமாக மாற்றி தனது தாயின் விருப்பத்தை நிறைவேற்றியனார் இயேசு. மாறி மாறி அன்பைப் பொழிந்துகொண்ட தாயும், மகனும் சந்திக்கிறார்கள். நொந்து நூலாகிப் போகிறார்கள். தன் தோளில் போட்டு தாலாட்டிய இந்தக் குழந்தையின் மெல்லிய மேனியிலா சாட்டையின் வரிகள். தன் பிள்ளையின் இரத்தம் மண்ணைச் செம்மண்ணாக்குவதை, எந்த தாய்தான் விரும்புவார். வாயடைத்து நின்றார், முகம் வாடினார். இன்றைக்கு நம்மிடையே மரியாவைப்போல் எத்தனை தாய்மார்கள் இருக்கிறார்கள்? இன்றைக்கு இயேசுவைப்போல தாயை அன்பு செய்யும் பிள்ளைகள் எத்ததனைபேர். பிள்ளைகளின் எதிர்காலத்தில் அக்கறை இல்லாமல் வாழும் பொறுப்பற்ற தாய்கள் இன்று இல்லையா? பெற்றோர்களை வீதியிலும், முதியோர் இல்லத்திலும் விட்டுவிட்டு தங்களுடைய நலனுக்காக மட்டுமே வாழும் பிள்ளைகள் இன்று இல்லையா? இவர்களெல்லாம் என்று மாறப்போகிறார்கள்?

***செபிப்போம்:*** *பெற்ற தாயை அன்பு செய்த இயேசுவே, பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையேயுள்ள அன்பு குறைந்து கொண்டிருக்கும் இந்நாள்களில் அன்பின் பொருளை உணர்ந்து கொள்ளவும் அன்பிற்காக வாழவும் வரம்தாரும். பெற்றோர்களை மதித்து வாழும் பிள்ளைகளாகவும் பிள்ளைகளைப் பேணிக் காக்கும் பெற்றோர்களாகவும் வாழ இறையருள் தாரும். ஆமென்.*

## 5. பிறருக்காக கைகள் நீளட்டும்

நீரே மெசியா, நாங்கள் யாரிடம் செல்வோம், வாழ்வுதரும் வார்த்தைகள் உம்மிடம்தானே உள்ளன என்று சொன்ன பேதுருவும் அவரை நான் அறியேன் என்று மும்முறை மறுதலித்துவிட்டு மறைந்து கொண்டார். இயேசுவோடு மூன்று ஆண்டுகள் ஒன்றாக உணவருந்தி, ஒன்றாக நடந்து, ஒன்றாகத் தங்கி, அவரின் சீடர்களாக வாழ்ந்தவர்கள் ஓடி ஒழிந்து கொண்டார்கள். சீடர்கள் துன்ப நேரத்தில் இயேசுவோடு உடனில்லை. அவருக்கு உதவிக்கரம் நீட்ட யாரும் இல்லாத நேரத்தில் சிமியோன் என்னும் வழிப்போக்கர் ஒருவர் முன்வருகிறார். வயலில் பகல் முழுவதும் கடினமாக உழைத்துவிட்டு களைப்போடு வந்து கொண்டிருந்த சீரேன் ஊரைச் சேர்ந்த சிமியோனை முதலில் கட்டாயப்படுத்தினாலும் இயேசுவின் நிலைகண்டு உதவி புரிய முன்வருகிறார். இன்று சிலுவைகளை, வாழ்வின் சுமைகளைச் சுமந்து தொடர்ந்து பயணிக்க முடியாமல் இருப்போர் நம்மிடையே பலர் உண்டு. உயிரக்கு ஆபத்து என்றவுடன் இயேசுவின் சீடர்களைப்போல ஓடி ஒழிந்து கொள்ளும் மனிதர்களா நாம்? அல்லது ஆபத்து என்றாலும் சிலுவை சுமந்து சென்ற இயேசுவின் அருகில் செல்லும் அன்புச் சீடரா நாம் ? அல்லது காலத்தின் தேவைக்கு ஏற்ப சிமியோன்போல் கட்டாயப்படுத்தப்பட்டாலும் மனமுவந்து சிலுவையைச் சுமக்கும் மனிதர்களா நாம்? பிறரின் சுமையை பகிராதவரை பாதைகள் நமக்கு புலப்படுவதில்லை. பிறரின் சுமையை சுவையாக்காதவரை வாழ்வில் மகிழ்ச்சி வரப்போவது இல்லை.

***செபிப்போம்:*** *கல்வாரி மலையை அடைய சிமியோனின் உதவியை நாடிய அன்பின் இயேசுவே, எங்களோடு வாழ்ந்து துன்புறும் மனிதருக்கு முன்வந்து உதவி செய்ய வரம் தாரும். ஆதரவற்றவர்களையும் ஏழைகளையும் அன்பு செய்து உம் முகத்தை அவர்களில் கண்டு பணிசெய்ய இறையருள் தாரும். ஆமென்.*

## 6. வெரோணிக்கா தேவை

பிலாத்துவின் அரண்மனையில் படைவீரர்கள் இயேசுவின் தலையில் முட்களால் செய்யப்பட்ட கிரீடத்தை வைத்தார்கள். இயேசு யூதர்களின் அரசன் என்று சொல்லி கேலி செய்தார்கள். நேற்று வைத்த முட்கிரீடத்தை இன்னும் அவர்கள் அகற்றவில்லை. சிலுவை சுமந்து கல்வாரி நோக்கி பயணம் செய்த இயேசுவின் தலையில் இருந்து இரத்த ஆறு புறப்பட்டது. முட்களுக்கு மிகவும் சந்தோஷம் இறைவனோடு ஒன்றிப் பிணைந்து விட்டோமென்று. இதன் சந்தோஷத்தில் இயேசுவின் தலையை அழுத்தி முத்தமிட்டதில், வெட்கப்பட்டுக்கொண்டு இரத்த நதி ஒவ்வொன்றும் தனக்கெனப் பாதையை ஏற்படுத்திக் கொண்டு நெளிந்து ஓடின. படைவீரர்கள் துப்பிய எச்சில் அவரது

முகத்தை மேடாக்கி இருந்தது. கெத்சமெனித் தோட்டத்தில் வியர்வைச் சுரப்பிகள் இரத்த சுரப்பிகளாய் மாறி இரத்த வியர்வை வியர்த்ததுபோல் மீண்டும் வியர்த்தது. யாருக்கும் தீமை செய்ய நினைக்காத இயேசு கிறிஸ்துவுக்கு நன்மை செய்ய, யாரும் முன்வரவில்லை. எல்லாரும் பயந்து ஓரமாய் நின்று வேடிக்கைப் பார்க்கிறார்கள். ஆண்களில் வீரமானவர்கள் யாரும் இல்லை. ஒரே ஒரு பெண் இயேசுவின் கோர முகத்தைக் கண்டு அவரின் முகத்தைத் துடைக்க முன்வருகிறார். அவர்தான் வீரப்பெண் வெரோணிக்கா. உதவி கேட்காமலே, கட்டாயப்படுத்தாமலே முன்வந்து உதவி புரியும் உன்னதமான பணியை வெரோணிக்கா செய்தார். ஊர் உலகம் என்ன பேசும் என்று பயமில்லாமல் துணிவோடு இயேசுவின் முகத்தைத் துடைத்து வெள்ளைத் துணியைச் சிவப்புக் கம்பளமாக்குகிறார். உலகம் என்னை புரிந்து கொள்ளாதபோது, புரிந்து கொள்பவரும் ஏற்றுக்கொள்ளாதபோது ஏற்றுக் கொள்பவரும்தான் என் நண்பர் என்று இயேசு உணர்கிறார். துன்புறும் இயேசுவின் நிலைகண்டு ஓரமாய் நின்று வேடிக்கை பார்த்த மனிதர்களில் விதிவிலக்குதான் புரட்சிப் பெண்தான் வெரோணிக்கா. நாம் எப்படி? பிறர் துன்புறுகிறபோது அவப்பெயர் வந்துவிடும் என்பதற்காக ஓரமாக நின்று வேடிக்கைப் பார்க்கிறோமா? அல்லது தூர விலகி ஒழிந்து கொள்கிறோமா? இன்றும் சமுதாய நலனில் அக்கறை கொண்டு தன்னை மறந்து வாழும் மேதா பட்கர், அருந்ததிராய் போன்ற வெரோணிக்காக்கள் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களை ஊக்குவிப்போம்; அதோடு நின்றுவிடாமல் வீரமுள்ள வெரோணிக்காக்களாக நம்முடைய பிள்ளைகளை உருவாக்குவோம்; நாமும் மாறுவோம்.



***செபிப்போம்:*** *பெண்மையைப் போற்றிய அன்பின் இயேசுவே, உம் சிலுவைப் பயணத்தில் ஒரே ஒரு பெண் உம்முகத்தைத் துடைக்க முன்வந்தார். அப்பெண்ணிடமிருந்த வீரமும் பாசமும் மனித நேயமும் எங்களில் வளர வரம்தாரும். நாங்களும் பிறரின் வாழ்வில் புதிய புனிதமான வெரோணிக்காவாக உருவாக இறையருள் தாரும். ஆமென்.*

## 7. படிக்கல்லாயிரு, தடைக்கல்லாயிராதே

சமாரியர்களும் இறைவனின் பிள்ளைகள் என்பதை உணர்த்த சமாரியா வழியாகப் பகலில் நடந்து சென்றவர் இயேசு. பாவிகள் என்று கருதப்பட்ட பெண்களுடன் பொது இடத்தில் நின்று பேசி அவர் வழியாக சமாரியர்கள் மீட்புக்கு காரணமானவர் இயேசு. ஏழைகளை, ஆதரவற்றவர்களை, பாவிகளை, விபசாரிகளை, வரிதண்டுவோரை தேடிச்சென்று இவர்களும் ஆபிரகாமின் மக்களே என்று கூறி மீட்பைத் தந்தவர் இயேசு. இப்படிப்பட்ட இயேசுவை பரிசேயர்கள், சதுசேயர்கள், மறைநூல் வல்லுநர்கள் ஆகியோர் பலமுறை கீழே விழத்தாட்ட முயன்றார்கள். முடியாமல் போனது. இவர்கள் அனைவருமே இயேசுவின் படிக்கற்களாக அல்ல மாறாக தடுக்கிவிழவைக்கும் தடைக்கற்களாகவே செயல்பட்டார்கள். இப்பொழுதோ இயேசு உடல் சோர்வால் சிறிய கல் தடுக்கி பாரச் சிலுவையுடன் கீழே விழுகிறார். அவரைத்

தடுக்கிவிட்ட சிறு கற்களில் தன்னை விழத்தாட்ட முயன்ற பலரின் முகங்களைக் காண்கிறார்.

நாமும் நமது வாழ்வில் பிறருக்குப் படிக்கல்லாக இராமல் தடைக்கல்லாக இருக்கின்றோம். தன்னைவிட அடுத்தவன் சுகமாக வாழ்ந்துவிடக்கூடாது என்ற பொறாமையால், அவனது அமைதியைக் குலைக்க, வளமையை வறட்சிப்படுத்த பல திட்டங்கள் தீட்டி செயல்படுத்தும் மனிதர்கள் நம்மிடையே பலர் உண்டல்லவா? பிறர் எதையாவது சாதிக்கும்போது நல்ல செயல்கள் செய்யும்போது, அதைக் கேலி செய்து ஒன்றுமில்லாமல் ஆக்குவதற்கு காரணமாக இருந்தது உண்டல்லவா? பிறரின் முன்னேற்றத்திற்குப் படிக்கற்களாக இருக்க வேண்டிய நாமே தடைக்கற்களாக இருப்பது ஏன்? பிறரைக் குற்றம்சாட்டி நம்முடைய தவறுகளை மறைப்பதற்காக நாம் போடும் நாடகங்கள் ஆயிரம் ஆயிரம். இவைகளை என்று மாற்றப்போகிறோம்.

***செபிப்போம்:*** *வீழ்ந்தவர்களை எழவைத்த அன்பின் இயேசுவே, வாழ்வில் பலரின் வீழ்ச்சிக்கு காரணமாக இருந்தோம் என்றால் மன்னிப்பு வேண்டுகிறோம். பிறரின் வாழ்வில் தடைக்கற்களாக அல்ல, படிக்கற்களாகவே வாழ வரம்தாரும். இன்று நாங்கள் பிறரைத் தட்டிக் கொடுப்பதற்குப் பதிலாகத் தட்டி விடுவதற்கே தயாராக இருக்கின்றோம். அவ்வாறு இல்லாமல் பிறரது படிக்கல்லாக நாங்கள் வாழ எங்களுக்கு அருள்தாரும். ஆமென்.*

## 8. விடுதலைப் பெறவேண்டும்

பெண்ணின் மேன்மைக்காக உழைத்த இளைஞர் இயேசுவின் நிலைகண்டு யூதப் பெண்கள் கண்ணீர் வடிக்கிறார்கள். இயேசுவின் காலத்தில பெண்களின் நிலை பரிதாபமாக இருந்தது. ஒவ்வொரு யூதனும் தன்னை ஒரு பிற இனத்தானாகவோ, ஒரு பெண்ணாகவோ, ஒரு நாயாகவோ படைக்காததற்காக நன்றி என்று பெண்ணை நாயுடன் ஒப்பிட்டுத் தினமும் காலையில் செபித்தான். அன்று பெண்கள் ஒரு பொருளாகவே கருதப்பட்டனர். விபசாரத்தில் பிடிபட்ட ஆணை விட்டுவிட்டனர். ஆனல் பெண்ணை மட்டுமே கல்லெறிந்து கொல்ல அவளை விரட்டித் துரத்தி வந்தனர். இயேசு மற்ற யூத ஆண்களைப் போலல்லாது சமுதாயத்தில் தாழ்ந்திருந்த பெண்களுக்கு விடுதலை அளிக்க முயல்கின்றார். 18 ஆண்டுகளாக இரத்தப் போக்கினால் அவதிப்பட்ட பெண்ணை குணமாக்குகின்றார். சமாரியப் பெண்ணிடம் தண்ணீர் வாங்கிப் பருகுகின்றார். விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணை இனியும் பாவம் செய்யாதே என்று மன்னித்து விடுகின்றார். மார்த்தா, மரியாளோடு விருந்து உண்கின்றார். தனது பாதத்தில் தைலம் தடவி, கூந்தலால் துடைக்கப் பாவிப்பெண்ணை அனுமதிக்கின்றார். தங்களுக்காக வாழ்ந்த இயேசு இன்று துன்புறுவதைக் கண்டு வெம்பி பெண்கள் அனைவரும் அழுகின்றனர். அதனால்தான் உங்களுக்காகவும், உங்கள் குழந்தைகளுக்காகவும் அழுங்கள். உங்கள் குழந்தைகளும் தங்களது தந்தையரைப் போலவே மனித மாண்பிற்கு முக்கியத்துவம் தராமல் சட்டத்திற்கும், சடங்குகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து வளர்கின்றனர். அவர்களைத் திருத்த முயலுங்கள் என்று மறைமுகமாக இயேசு கூறுகின்றார். இன்றும் பெண்மையின் மாண்பைச்

சீரழிக்கும் நிகழ்ச்சிகள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. பிள்ளைகளின் வளர்ப்பில் உலகப் போக்கை கற்றுக்கொடுத்து ஆணாதிக்கத் தன்மையை உள்வாங்கும் பிள்ளைகள் கிறிஸ்தவ குடும்பங்களில் இன்றும் இருக்கிறார்கள். உங்கள் பிள்ளைகளும் நீங்களும் எப்படிப்பட்டவர்கள்?

***செபிப்போம் :*** *அழும் பெண்களுக்கு ஆறுதல் கூறிய அன்பு இயேசுவே, பெண்மையின் மேன்மையைக் காக்கவும் ஆணாதிக்க இயல்பிலிருந்து விடுதலை பெறவும் வரம் தாரும். ஆமென்.*

## 9. நம்பிக்கையால் மீண்டும் எழுவோம்



இரண்டு முறை விழுந்தவர் மூன்றாவது முறையும் சிலுவையின் பாரத்தால் தரையில் விழுகிறார். தன்னம்பிக்கை இல்லாத மனிதர்கள் விழும்போதெல்லாம் எழுவது இல்லை. வீழ்ந்தவர்களையும் கைதூக்கி விடுவதில்லை. ஒரு தாலந்து பெற்ற மனிதர் தன்னம்பிக்கை இல்லாததால் பெற்றுக்கொண்டதை புதைத்து வைத்து விரயமாக்கினார். அதன் விளைவாக தன்னுடைய வாழ்வையே இழக்க வேண்டியது வந்தது. சீடர்கள் தங்களுடைய வாழ்வில் தன்னம்பிக்கை கொண்டும் இறை நம்பிக்கை கொண்டும் வாழ வேண்டும் என்று இயேசு பலமுறைக் கற்றுத் தந்தார். சீடர்களால் விரட்ட முடியாத பேய்களை தனது நம்பிக்கையால் விரட்டிய இயேசு, 'இரையாதே, அமைதியாயிரு' என்று உறுதியான நம்பிக்கையான வார்த்தைகளால் காற்றையும் கடலையும் அடக்கினார். தான் மூன்றாம் முறையாக கீழே விழுந்தபோதும், எங்கு நம்பிக்கை இல்லையோ அங்கு முயற்சி இல்லை என்பதை உணர்ந்தவராய் நம்பிக்கையோடு எழுந்து தமது கல்வாரிப் பயணத்தைத் தொடர்கிறார். நம்பிக்கையால் வாழ்வில் மாற்றம் கொண்டுவர முடியும் என்ற இறைச்செய்தியைத் தந்தவர், மூன்றாம் முறைகீழே விழுந்தாலும் பிறருக்குப் பாடமாக மாறுவதற்காக எழுந்து நடந்தார். நம்முடைய வாழ்வில் நாம் எப்படி இருக்கிறோம்? சந்தேகம் என்னும் பேயால் நம் குடும்பத்தைச் சீர்குலைத்தது இல்லையா? நம்பிக்கையற்ற வார்த்தைகளால் பிறரின் முன்னேற்றத்திற்கு தடையாக இருந்ததில்லையா? இறை நம்பிக்கை கொண்டவர்கள் என்று கூறிக்கொண்டு பில்லிசூனியங்களையும் நல்ல நேரம் கெட்ட நேரங்களையும் பார்த்ததில்லையா? நம்பிக்கை இல்லாமலே நாம் இன்னும் வீழ்ந்துதான் கிடக்கிறோம்.

***செபிப்போம்:*** *வீழ்ந்தாலும் எழுந்து நடந்த அன்பின் இயேசுவே, நாங்கள் அவநம்பிக்கையால் வாழ்வில் தோல்விகளை சந்தித்துக் கொண்டிருக்கிறோம். இறை நம்பிக்கை கொண்டவர்கள் என்ற முறையில் அதற்கேற்ற வாழ்க்கை வாழாமல் முரண்பட்டு வாழ்கிறோம். நாங்கள் எங்கள் நம்பிக்கையில் உறுதியுடன் வாழவும் உண்மையுடன் வளரவும் இறையருள் தாரும். ஆமென்.*

## 10. ஆடைகளை உடுத்துவோம்

அன்று மக்களை அடக்கி ஒடுக்கி வந்த சடங்கு சட்டங்களை இயேசு வன்மையாகக் கண்டித்தார். அவைகளை மாற்றிட அனைவரும் முன்வர வேண்டும் என்ற அழைப்பையும் கொடுத்தார். ஓய்வு நாளைவிட மனிதநலம் மேன்மையானது என்பதை கற்றுத்தந்தார். சமுதாயத்தின் தீமைகளை களைந்திட சீடர்களுக்குப் பயிற்சி தந்தார். ஆலயத்தை வியாபாரக் கூடமாக மாற்றியவர்களை விரட்டியடித்தார். பொது இடங்களில் நோன்பு இருந்து செபிக்கும் வெளி வேடத்தை அகற்ற வேண்டும் என்று கண்டிப்பாகப் போதித்தார். தீமைகளை களைவதற்காக இறையாட்சி என்னும் மொழியைக் கற்றுக்கொடுத்தார். இறையாட்சிப் பணிக்காக நீண்ட பயணம் மேற்கொண்டவர். இப்பொழுதோ கல்வாரி மலையை நோக்கி சிலுவையை சுமந்து கொண்டு நீண்ட பயணத்தை மேற்கொண்டிருக்கிறார். மண்டையோடு எனும் மலையை அடைந்த உடன் படைவீரர்கள் இயேசுவின் ஆடைகளை உரிகின்றார்கள். உடலோடு ஒட்டியிருந்த ஆடைகள் உரியப் பட்டவுடன் இரத்தம் மீண்டும் ஆறாய் பெருக்கெடுத்து ஓடுகிறது. சுற்றிநின்ற மக்கள் வேடிக்கைப் பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். இன்றும் இயேசுவைப் போலவே ஆடையின்றி அவமானமாக நின்றுகொண்டிருக்கும் மக்கள் பலர் உண்டு. இவர்களை வேடிக்கை பார்ப்போரும் பலர் உண்டு. அன்றைய படைவீரர்களைப்போல இயேசுவின் ஆடையை உரியும் செயல்கள் நம்மிடையே இன்னும் குறையவில்லை. சாதி வெறி, பொறாமை, வஞ்சகம், பழிவாங்கும் குணம், மன்னிக்க முடியாத மனநிலை, உறவோடு வாழ முடியாமை ஆகியவை இயேசுவின் ஆடைகளை அகற்றும் உரோமையரின் கரங்கள் அல்லவா?

*செபிப்போம் : எங்களுக்காக அவமானத்தை ஏற்றுக்கொண்ட அன்பின் இயேசுவே, அவமான அடையாளங்களோடு வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதர்களின் மீட்புக்காக எங்களையே கையளிக்க வரம்தாரும். பிறரின் அவமானத்திற்கும் வீழ்ச்சிக்கும் காரணமாக மாறாமல் இருக்க இறையருள் தாரும். ஆமென்.*

## 11. ஆணிகளை அகற்றுவோம்

இவன் போசனப்பிரியன், குடிகாரன், பாவிகளோடும், வரிதண்டுப வரோடும் உணவு உண்பவன், மதிமயங்கியவன், பேய்களின் தலைவனைக் கொண்டு பேய்களை ஓட்டுபவன். இறைமகன் என்று கூறி இறைவனைப் பழிப்பவன். இப்படி இயேசுவைப்பற்றி பலவாறு பலமுறை பலரும் பேசியிருக் கிறார்கள். அவர்களின் வார்த்தைகள் அவ்வப்பொழுது முட்களாய் இயேசுவைச் சந்தித்தாலும் அவைகளெல்லாம் கூர்மை இழந்து போயின. நீண்ட கல்வாரிப் பயணத்தை பெரும் சிலுவையுடன் மேற்கொண்ட இயேசுவை சிலுவையில் அறைகிறார்கள். பெரும் ஆணிகள் இயேசுவின் கைகளையும் கால்களையும் துளைத்து மரத்தோடு அவரைப் பிணைக்கின்றன. பாசத்தோடு பலரையும் அரவணைத்த பாசக் கரங்களுக்குக் கிடைத்த பரிசுதான் ஆணி. கலிலேயா முழுவதும் பயணித்த கால்களுக்குக் கிடைத்த இறுதிக் காலணிதான் இந்த ஆணிகள். உடலைத் தைத்த ஆணிகளைவிட உள்ளத்தைத் தைக்கும் ஆணியை நினைத்துத்தான் இயேசு வேதனைப்பட்டிருக்க வேண்டும். இன்றும் இயேசுவின் கரங்களையும் கால்களையும் ஆணிகளால்அறையும் செயல்கள் நம்மிடையே குறைவில்லாமல் இருக்கின்றன. மனித நேயத்தை பேணவேண்டிய

நாம் மனித நேயம் இல்லாமலே வாழும்போது இயேசுவை சிலுவையில் அறைகிறோம். பிறரும் இறைவனின் சாயல் என்பதை ஏற்றுக்கொள்ள மறுக்கும்போது இயேசுவை சிலுவையில் ஆணியால் அறைகிறோம். நீதியை, உண்மையை, பாசத்தை, அன்பை, உறவை, இலட்சியத்தை , நம்பிக்கையை இழக்கும் ஒவ்வொரு முறையும் இயேசுவை ஆணிகளால் சிலுவையில் அறைந்து கொண்டுதான் இருக்கிறோம். இதை மாற்ற முன்வருவோமா?

*செபிப்போம்: சிலுவையில்அறையப்பட்ட அன்பு இயேசுவே, எங்களை மீட்பதற்காய் சிலுவையில் தொங்கினீர். பிறரின் சுமைகளை சுமந்து செல்ல, பிறரின் வாழ்வில் நம்பிக்கை தர எங்களுக்கு வரம் தாரும். யாரையும் எந்த விதத்திலும் சிலுவையில் அறைந்து கொன்றுவிடமால் இருக்க இறையருள் தாரும். ஆமென்.*

## 12. இறைத்திட்டத்தை நமதாக்குவோம்

பிறரைப்பற்றி சிந்தித்து பிறருக்காக வாழ்ந்த இறைமகன் சிலுவையில் உயிர் துறக்கிறார். சாவைக் கொண்டு வந்த பாவத்தை தன் சாவால் வெற்றி கொள்கிறார். மரணத்தை மரணத்தாலே சந்திக்கிறார். 33 வயதில் கடவுளின் மகன் விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையே சிலுவையில் தொங்கி உயர் துறக்கிறார். பலரைக் காப்பாற்றியவன் தன்னையே காப்பாற்றிக் கொள்ளட்டும் என்று யூதர்கள் கேலி செய்தனர். நினைத்திருந்தால் இயேசு தன்னுடைய இறை வல்லமையால் இறங்கி வந்திருக்கலாம். மாறாக துன்பத்தை, சாவை ஏற்பதன் வழியாக பலருக்கும் பாடமாகி வாழ்வைத் தருகிறார். தம்முடைய இரத்தத்தால் பலரையும் புனிதமாக்கி இவ்வுலகை மீட்கும் உன்னதமான பணியில் "எல்லாம் நிறைவேறிற்று" என்று சொல்லி தலைசாய்த்து உயிர் விடுகிறார். இன்று நம்மில் பலர் மரணத்தைக் கண்டு பயப்படுகிறோம். இயேசுவைப்போல் வாழ்ந்தால் மரணம் நம்மைக்கண்டு பயப்படும். பாவத்தையும் சாவையும் வென்ற இயேசு கிறிஸ்துவினுடைய மீட்பில் பங்குபெறும் நாம் இயேசுவைப்போல எல்லாம் நிறைவேறிற்று என்று சொல்லும் மனநிலை பெறுவோம். நம்முடைய அன்றாட வாழ்வில் இறைத் திட்டத்தை நிறைவேற்ற முயற்சி செய்வோம்.



*செபிப்போம்: எங்களுக்காக உயிர் துறந்த அன்பின் இயேசுவே, வாழ்வில் உம்மைப்போல தன்னலம் மறந்து, பிறருக்காக வாழ வரம் தாரும். பாவத்தையும் சாவையும் உம்முடைய இறையாற்றலால் வெற்றிகொள்ள முடியும் என்ற நம்பிக்கை தாரும். நாங்கள் உம்மைப்போல் வாழ்ந்து மரிக்க இறையருள் தாரும். ஆமென்.*

## 13. நம்மையும் அர்ப்பணம் செய்வோம்

இதோ உமது அடிமை, உமது வார்த்தையின்படியே எனக்கு ஆகட்டும் என்று கூறி, ஊர் உலகம் என்ன கூறும் என்று கவலைப்படாமல் கன்னி மரியா கருவுற தன்னையே இறைவனுக்கு அர்ப்பணித்தார். அந்த அர்ப்பண அழைப்புக்கு ஏற்ப அந்த அன்னை மரி இறை வார்த்தையைக் கேட்டு

வாழ்ந்தார். அவருக்குப் பிறந்த மகன் இயேசுவோ ஒருபடி மேலே போய் 'எனது விருப்பம் அன்று; உமது விருப்பப்படியே ஆகட்டும்' என்று கூறி மனிதரின் இகழ்ச்சிக்கும், துன்புறுத்தலுக்கும் கவலைப்படாமல் தன் உயிரையே இறைவனின் விருப்பப்படி மக்களுக்காக அர்ப்பணித்தார். இரண்டு அர்ப்பணிப்புகளும் தனக்காகச் செய்யப்படவில்லை. இறைவனின் விருப்பப்படி மக்களுக்காகச் செய்யப்பட்டவை. தனது மடியில் குழந்தையை வைத்து தூங்க வைத்த அதே தாய் மரியா, இன்று ஆழ்ந்த நித்திரையில் சாவின் பிடியில் தூங்கும் இயேசுவின் உயிரற்ற உடலை தன் மடியில் கிடத்தி இருக்கிறார். உன் உள்ளத்தை ஒரு வாள் ஊடுருவும் என்ற இறைவனின் வார்த்தைக்கு ஏற்ப இயேசுவோடு மக்களின் புறக்கணிப்பையும் சிலுவையின் துன்பத்தையும் ஏற்றுக்கொண்டு சிலுவை அடியில் துன்புறும் தாயாக காட்சி தருகிறார். தாய் என்ற நிலையில் துன்புற்றாலும் தன் மகன் பிறரின் வாழ்வுக்காக உயிர் துறந்திருக்கிறார் என்று மகிழ்ந்திருக்க வேண்டும். அன்னையின் அரவணைப்பில் வாழும் எல்லா மனிதருக்கும் அவரின் பாதுகாப்பு உண்டு.

இன்று நாம் என்ன செய்கின்றோம்? இறைவன் திருமுழுக்கு வழியாக நம்மை அவருடைய சொந்தப் பிள்ளைகளாக மாற்றியிருக்கிறார். ஒவ்வொருவருக்கும் ஒரு குறிப்பிட்ட பணி அழைப்பையும் அர்ப்பணத்தையும் தந்திருக்கிறார். அதற்கேற்ப வாழ வேண்டும் என்ற அழைப்பையும் கொடுக்கிறார். பல நேரங்களில் வீண் பெருமைகளுக்காக அனைத்தையும் செய்ய விரும்புகிறோம். அன்னை மரியா போல, இயேசுவைப்போல பிறருக்காக வாழும் வாழ்வைவிட தன்னலத்திற்காக வாழும் வாழ்க்கையை மேற்கொண்டிருக்கிறோம். இறைவன் பிறருக்காக வாழும் அழைப்பை நமக்குத் தருகிறார். இவ்வழைப்பின் வழியாக வாருங்கள் உயிரற்று பிணமாய் கிடக்கும் சமுதாயத்திற்கு உயிர் கொடுத்து வாழ்விப்போம்.

*செபிப்போம்: எங்களுக்காக உயிர் தந்த இயேசுவே, உம் அர்ப்பணத்தையும் உம் தாயின் அர்ப்பணத்தையும் எமதாக்கி வாழ வரம் தாரும். பிறருக்கு நன்மை செய்வதில் உம்மைப்போல் வாழ இறையருள் தாரும். ஆமென்.*

## 14. எளிமை நமது வாழ்வாகட்டும்

இயேசு பிறந்ததுமே அவர் கிடத்தப்பட்டது மாட்டுத் தொழுவத்திலுள்ள தீவனத் தொட்டி. அவர் இறந்தபோதும் அவரைப் புதைக்க அவருக்கெனச் சொந்த கல்லறை இல்லை. அரிமத்தியா யோசேப்பு தனக்கென வைத்திருந்த கல்லறையை இயேசுவுக்குத் தானம் செய்கிறார். வானத்துப் பறவைகளையும், நாணல்களையும் அணிசெய்து அழகபார்க்கும் இறைமகனுக்கு தலைசாய்க்கக்கூட சொந்த இடம் இல்லை. அவர் இறக்கும் தருவாயில் மனிதனின் அடிப்படைத் தேவையைக்கூட சுருக்கிக் கொண்டார். கசந்த காடி அவரது உணவு, அவரது தோலே அவரது உடை, சிலுவை மரமே அவரது இறுதிப் படுக்கையாக இருந்தது. அவரது எளிமை எத்துணை மாண்புடையது. சீடர்களைப் பணிக்கு அனுப்பும்போது தேவைக்கு அதிகமாய் எதையும் எடுத்துச்செல்லக் கூடாது என்று சொன்னவர். தேவைகளைச் சுருக்கு பணியை விரிவாக்கக் கற்றுக்கொடுத்தவர் துயில் கொள்வதற்குகூட இறுதி கல்லறை இரவலாகப் பெறவேண்டிய அவலம். மனிதர்கள் தேவையைப் பெருக்கிக்

கொள்வதன் வழியாக பிரச்னைகளைப் பெருக்கிக் கொள்கிறார்கள். இயேசுவின் வழியில் வாழ்ந்த முதல் சீடத்துவக் குடும்பம் தேவைகளைச் சுருக்கி பகிர்வுகளை பெருக்கிக் கொண்டது. அதனால்தான் அங்கே இறைவனின் ஆவியானவர் முழுவதும் செயல்பட முடிந்தது. நம்பிக்கை கொண்டோர் மத்தியில் நல்வாழ்வு மிளிர்ந்தது. தேவைகளை பெருக்கிக் கொள்வதைவிட சுருக்கிக்கொண்டு வாழ நாம் கற்றுக்கொள்வோம். சேர்ப்பதில் அல்ல, கொடுப்பதில் மகிழ்ச்சி காண்போம்.

***செபிப்போம் :*** *பிறரின் கல்லறையில் துயில் கொண்ட அன்பு இயேசுவே, உம்மைப்போல நாங்கள் எளிமைக் கோலம் பூண்டு பிறரின் நலத்தில் அக்கறை கொண்டு வாழவும் பகிர்வின் வழியாக பிறருக்கு நம்பிக்கை தரவும் இறையருள் தாரும். ஆமென்.*

## முடிவாக

சிலுவைப்பாதை இயேசுவின் பாடுகளை தியானம் செய்த மீட்பின் பாதை. இதன் மூலம் இயேசுவின் மனநிலையிலும் நம்பிக்கையிலும் பங்குபெற்றிருக்கிறோம். இந்த பங்களிப்பு நம்மை மனிதர்களாக புனிதர்களாக மாற்றும் ஆற்றல் கொண்டதாக அமைய வேண்டும். நம்முடைய அன்றாட வாழ்வில், குடும்பத்தில், பணிசெய்யும் இடங்களில், பிறரோடு கொள்ளும் நட்புறவில் இயேசுவைப்போல சுமைதாங்கிகளாக மாறுவோம். மீண்டும் மீண்டும் இயேசுவின் வழியில் அவரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி தொடர்ந்து பயணிப்போம்.

**அருள்பணி. இரா. மரிய டெல்லஸ்**
**சகோ. தேவசகாயம் பிரான்சிஸ்**

## திருத்தந்தையின் திருவுரை ஏட்டில் சிறப்பமர்வு

தமிழக விவிலியப் பணிக்குழு ஒருநாள் கருத்தமர்வை புனித பூண்டி அன்னை ஆலயத்தில் ஏற்பாடு செய்திருந்தது. பெப்ரவரி 10, 2011 – அன்று காலை 9.30 –க்கு தொடங்கி மாலை 5 மணிவரை சிறப்புரைகள் வழங்கப்பட்டன. திருத்தந்தை 16–ஆம் பெனடிக்ட் அவர்களின் "ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு / ஆண்டவரின் அருள்வாக்கு" (Verbum Domini) என்ற திருவுரை ஏடுபற்றி மேதகு ஆயர் செ. சூசைமாணிக்கம், அருள்பணி. அலோசியஸ் சேவியர் ஆகியோர் சிறப்புரை வழங்கினர். இதனை ஒருங்கிணைத்து பல்வேறு வசதிகள் செய்து கொடுத்த கும்பகோணம் மறைமாவட்ட விவிலியப் பணிக்குழு செயலர் அருள்பணி. யேசுராஜ் அவர்களுக்கும், திருத்தல அதிபம், பொருளாளர், பங்குப் பணியாளர், உதவிப் பணியாளர்கள் அனைவருக்கும் நன்றி. இக்கருத்தரங்கில் பங்கேற்ற (88 பேர்) விவிலியப் பணிக்குழுக்கள் செயலர், அருள்தந்தையர், சகோதரிகள் மற்றும் பொதுநிலையினருக்கு நன்றி.

**அருள்பணி. இரா. மரிய டெல்லஸ்**
*தமிழக விவிலியப் பணிக்குழு*

*"நீங்கள் மறைக்கல்வியாளர்களாகத் திகழ அழைக்கப்பட்டுள்ளீர்கள்"*

# இந்திய கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் 23-ஆம் கூட்டம்

## 06-12 சனவரி 2011

## தூய இதய குருத்துவக் கல்லூரி, சென்னை.

சென்னை பூந்தமல்லியில் உள்ள தூய இதய குருத்துவக் கல்லூரியில் 2011 சனவரி மாதம் 6-ஆம் தேதி முதல் 12-ஆம் தேதிவரை "மறைக்கல்வி மறுமலர்ச்சி: வலிமையான இந்தியத் திருச்சபைக்கு இன்றியமையாக் கூறு" என்ற பொருள்பற்றி பேசுவதற்காக, இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவையின் 123 ஆயர்களாகிய எங்களை ஒன்றுகூடி வரச்செய்த எல்லாம் வல்ல இறைவனுக்கு நாங்கள் நன்றி கூறுகிறோம். தத்தம் மறைமாட்டங்களில் நம்பிக்கையைப் போதிக்கும் அதிகாரம் கொண்டவர்களாகவும் முதன்மையான மறைக்கல்வியாளர்களாகவும் நாம் இருப்பதால், இந்தியத் திருச்சபையில் மறைக்கல்வியைப் புதுப்பித்தலை ஊக்கப்படுத்துவதில் கருத்துடையவர் களாக இருக்கிறோம்.

### மறைக்கல்வியின் அடித்தளம்

இந்தியாவிலுள்ள திருச்சபை மறைச்சாட்சியரின் இரத்தத்தினாலும் ஆர்வமுள்ள, பிடிப்புடைய மறைப் போதகர்களின் விலையேறப்பெற்றப் பணியாலும் கட்டி எழுப்பப்பட்டுள்ளது. இந்தியாவிலுள்ள திருச்சபையை மிகுந்த ஆர்வத்தோடு கட்டி எழுப்புவதற்காக அவர்கள் மேற்கொண்ட முன்னோடியான முயற்சிகளை நன்றியோடு நினைத்துப் பார்க்கிறோம். மேலும் எண்ணற்ற ஆயர்கள், அருள்பணியாளர்கள், துறவியர், மறைக்கல்வி ஆசிரியர்கள், பொதுநிலையினருள் இருக்கின்ற மறைக்கல்வி ஆசிரியர்கள் இவர்களின் அர்ப்பணம், பெற்றோர்களின் விலைமதிப்புள்ள பங்களிப்பு ஆகியவை நமது திருச்சபை மென்மேலும் நடைபோட எளிதாக்கியுள்ளன. நமது வளமிக்க கலாச்சாரத்தையும் சமயம் சார்ந்த மரபுகளையும் கருத்தில் கொண்டவர்களாய் மறைக்கல்வி ஊழியத்தில் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

### காலத்தின் அடையாளங்கள்

தூய ஆவியால் வழிநடத்தப்பட்டும் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தால் தொடங்கப்பெற்ற மறைக்கல்வியின் புதுப்பித்தலால் தூண்டப்பெற்றும், இந்திய சமூக - கலாச்சார, பன்முக சமயச் சூழல்கள் இவற்றில் காலத்தின் அடையாளங்களைக் காண ஒவ்வொரு முயற்சியையும் நாங்கள் மேற்கொள்கிறோம். ஒரு குறிப்பிட்ட கலாச்சாரத்தில் நம்பிக்கை தன்னையே வெளிப்படுத்துகிறது; இறைமக்களின் குறிப்பிட்ட அனுபவங்களின் வாயிலாக முதிர்ச்சி அடைகிறது. எனவே நமது வளமார்ந்த கலாச்சார, சமய மரபோடு நாம் நிலைகொள்ளவும் நமது பணியில் கலாச்சாரம், இதர சமயங்களைப் பின்பற்றும் மக்கள், ஏழைகள், உலகம் ஆகிய நால்வகையான உரையாடலில் ஆழமாக ஈடுபட நாம் அழைக்கப்படுகிறோம்.

### முன்னேறிச் செல்ல

நம்முடைய முன்னோர்களுடைய வளமிக்க, விலையுயர்ந்த பங்களிப்பிலிருந்து அகத்தூண்டுதலைப் பெற்றுக்கொண்டு, மறைக்கல்வி சார்ந்த களத்தில் ஏற்பட்ட அண்மைக்கால முன்னேற்றங்களைச் சார்ந்து நின்று, துடிப்பான திருச்சபைக்குத் தலையாயக் கொள்கையாக இருக்கின்ற மறைக்கல்வி மறுமலர்ச்சிக்கு நம்பிக்கையோடும் துணிவோடும் உழைக்கவும் நம்மால் முடிகிறது.

## இறைவார்த்தை

மறைக்கல்வியின் முக்கிய ஆதாரமாகவும் தொடக்கமாகவும் இறைவார்த்தை இருக்கிறது என்பதை நாங்கள் வலியுறுத்திக் கூறுகின்றோம். அது, தங்களுடைய வாழ்வில் இறையன்பை அனுபவிக்கவும் அதைத் திருவழிபாட்டில் கொண்டாடவும் நற்செய்தி மதிப்பீடுகளால் பரவலாக்கப்பட்ட வாழ்க்கை வாழவும் இறைமக்களுக்கு அது உதவியாக இருக்கிறது. இறை வார்த்தை எங்கும் பரவி இருக்கிறது. திருநூலின் ஒளியிலும் திருச்சபையின் அனுபவத்திலும் அதைக் கண்டுகொள்ள முற்பட வேண்டும்.

## மறைக்கல்வியின் இன்றியமையாமை

நமது பிறப்பிலிருந்து இறப்புவரை மறைக்கல்வியின் செயல்பாடு இடம் பெறுகிறது. நம்பிக்கையில் முதிர்ச்சியை மறைக்கல்வி வளர்க்கிறது. வேதியர்கள், வேதியர்களுடைய மறைக்கல்வி பெறுவோர் இவர்களின் தொடர் முயற்சியை அது எதிர்நோக்கி இருக்கிறது. மறைக்கல்வி என்பது வகுப்பறைக்கோ குழந்தைகளுக்கோ மட்டும் வரையறுக்கப்படவில்லை என்பதை நாங்கள் உறுதியாக நம்புகிறோம். அது திருச்சபையின் முழு வாழ்வையும் ஒவ்வொரு வயதினரையும் தழுவி நிற்கிறது. எனவே திருச்சபையின் மறைக்கல்வி சார்ந்த முன்முயற்சிகளில் பங்குகொண்டு, திருவிவிலியத்திலும் மரபிலும் திருச்சபை ஆசிரியத்தின் ஆவணங்களிலும் கத்தோலிக்கத் திருச்சபையின் மறைக்கல்வி நூலிலும் விளக்கிக் கூறப்பட்டுள்ள நம்பிக்கையின் உட்பொருளை அறிந்து கொள்ளவும் தனிப்பட்ட முறையில் கிறிஸ்துவோடு உள்ள உறவில் வளரவும் தங்களுடைய வாழ்வில் உண்மையான, நம்பத்தக்க விசுவாசத்தின் சாட்சி களாகத் தாங்கள் திகழவும் தேவையான நேர்மையான, ஈடுபாடுள்ள முயற்சியை மேற்கொள்ளுமாறு திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவரையும் அறிவுறுத்துகிறோம். நம்முடைய பகுதிகளிலும் மறைமாவட்டங்களிலும் பங்குகளிலும் இதுவரை மேற்கொள்ளப்பட்ட மறைக்கல்வி சார்ந்த முயற்சிகளை பாராட்டுவதோடு, மறைக்கல்வியின் ஒவ்வொரு பகுதியிலும் அதாவது, பங்கு, குடும்பம், சிறு கிறிஸ்தவ குழுமங்கள் பொதுநிலையினருக்கான இயக்கங்கள், மேய்ப்புப் பணிசார்ந்த குழுக்கள், கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் வரையறுக்கப்பட்ட, செயலூக்கம் பெற்ற மறைக்கல்வியை ஆர்வத்தோடு நாங்கள் எதிர்நோக்குகின்றோம்.

## மறைக்கல்வியாளர்களின் இன்றியமையா பங்கு

திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவரும் ஒரு மறைக்கல்வியாளராகத் திகழ அழைக்கப்பட்டிருக்கிறார். அவர் கிறிஸ்துவின் மூன்றுவித, அதாவது குருவுக்குரிய, இறைவாக்கினருக்குரிய, அரசர்க்குரிய பணிகளில் பங்கு கொள்கின்றார். மறைக்கல்வியாளர்கள் என்ற முறையில் நாம் கிறிஸ்துவின் ஆள்தத்துவத்தில் வேரூன்றி இருக்கவும் இறையன்பு என்னும் நமது சொந்த அனுபவத்தை மற்றவர்களுக்குக் கொடுக்கவும் இவ்வாறு அன்பு, அமைதி, ஒற்றுமை, நீதி கொண்ட ஒரு புதிய நாகரீகத்தை வெளிக்கொணர்வதற்காகவும் அழைக்கப்பட்டிருக்கிறோம். வாழ்க்கை சாட்சியம், ஊக்கமுள்ள போதனை இவற்றின் வாயிலாக ஒவ்வொரு மறைக்கல்வியாளரும் - ஆயர், அருள்பணியாளர், துறவி, ஆசிரியர், பொதுநிலை வேதியர், பெற்றோர் - திருப்பயணிகளாக இருக்கும் மக்களுடைய நம்பிக்கையை ஆர்வத்துடன் வளர்க்கவும் ஒவ்வொரு சகோதரியிடத்திலும் சகோதரரிடத்திலும் இறையாட்சியை நிறுவவும் அழைக்கப்பட்டிருக்கிறார். சமய, சாதிய, மொழி அல்லது இன பாகுபாடுகளை மேற்கொண்டு, கிறிஸ்துவில் வாழ்வின் முழுமையைக் காண வேண்டும்.

## தலத் திருச்சபையில் பெற்றோர்களின் பங்கு

சமுதாயம், திருச்சபை இவற்றின் அடிப்படை கூறு குடும்பம். அதுவே திருச்சபையினுடைய மறைக்கல்வி ஊழியத்தின் பொருளும் நோக்கமுமாகும். 'தம்' குழந்தைகளுக்கான மறைக்கல்வியில் பெற்றோர்களின் பங்கு, குறிப்பாக தாயின் பங்கு மிகவும் இன்றியமையாததாகும். அவர்களே தங்கள் பிள்ளைகளின் முதன்மையான, சிறந்த மறைக்கல்வியாளர்கள் ஆவர். எனவே தொடர்ச்சியாக அவர்களை நம்பிக்கையில் வளர்க்கவும் எடுத்துக்காட்டாக, குடும்ப செபம், குடும்ப மறைக்கல்வி வாயிலாக தம் பிள்ளைகளை நம்பிக்கையில் உருவாக்குவதில் இன்றியமையாத பங்கு வகிக்கவும் எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளுமாறு பெற்றோர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

## ஊடகங்கள் வழி நம்பிக்கையைப் போதித்தல்

ஊடகமென்னும் சமூகத் தொடர்பு சாதனம் உலகிற்குக் கிடைத்த கடவுளின் பெருங் கொடையாகும். இன்று உருவாக்கும் பணியில் முதன்மையான கருவியாக அவை இருப்பதால் அவற்றின் வளர்ச்சியை நாங்கள் பாராட்டுகிறோம். எனினும் இளம் உள்ளங்களின்மேல் அவை எதிர்மறையான தாக்கத்தையும் ஏற்படுத்தக்கூடும் என்பதையும் அறிந்திருக்கிறோம். அதனால் அவர்கள் தற்போது உள்ள மரபு மதிப்பீடுகள் குறித்து வினா எழுப்பக்கூடும். மரபு மதிப்பீடுகளுக்கு அவை ஒரு பெரிய சவாலாகவும் இருக்கக்கூடும். ஆகவே ஊடகத்தைப் பகுத்தாயவும் அதே வேளையில் நமது மறைக்கல்வியைப் போதிக்கும் வழிமுறைகளைச் சக்தி வாய்ந்தவைகளாக மாற்ற இத்தகைய காணும் - கேட்கும் முறைகளைப் பயன்படுத்துமாறும் திருச்சபையின் ஒவ்வோர் உறுப்பினரையும் தூண்டுகின்றோம்.

## அர்ப்பண உணர்வுக்கு அழைப்பு

செயலூக்கம் கொண்ட திருச்சபையை உருவாக்குவதற்கு மிகவும் இன்றியமையாததான மறைக்கல்வி புதுப்பித்தலைக் கருத்தில் கொண்டவர்களாயிருந்தாலும் நமது சொல்லாலும் வாழ்வாலும் மறைக்கல்வி யாளர்களாக இருக்கிறோம் என்ற நமது அழைத்தலைக் குறித்த உணர்வில் வளருமாறு ஒவ்வோர் அருள்பணியாளரையும் துறவியையும் பொது நிலையினரான ஆணையும் பெண்ணையும் நாங்கள் வற்புறுத்துகிறோம். ஒவ்வொரு வயதினருக்கும் - வயது வந்தோர், குடும்பங்கள், இளையோர், வாலிப வயதினர், குழந்தைகள், சமூக பாகுபாட்டுக்குப் பலியாகியிருப்போர், உடல் சார்ந்த, மனம் சார்ந்த மாற்றுத் திறனாளிகள், கலாச்சாரத்தில் வேரூன்றிய மக்கள் - ஏற்ற மறைக்கல்வியைச் சீரமைத்திடும் முயற்சிகளை மேற்கொள்ளுமாறு நமது மறைமாவட்டங்களிலும் பங்குகளிலும் கல்வி நிறுவனங்களிலும் நம்பிக்கையை அளிப்பதில் பொறுப்புள்ளவர்களை பெரிதும் கேட்டுக் கொள்கிறோம். தேசிய மறைக்கல்வி வழிகாட்டி (National Catechetical Directory) என்னும் நமது நூலில் நாம் கோடிட்டுக் காட்டியுள்ள ஆலோசனைகள் "திருப்பயணிகளாக இருக்கும் மக்களின் நம்பிக்கையை வளர்த்தல்" இந்தியாவிலுள்ள திருச்சபையின் பயனுள்ள ஆன்மிகப் புதுப்பித்தலை நோக்கி மேற்கொள்ளும் அவர்களது முயற்சிகளில் பெரிதும் துணை செய்யும்.

மிகச்சிறந்த மறைக்கல்வியாளராகிய நம்முடைய தூய அன்னை, மறைக்கல்வி என்னும் உயரிய பணியில் நமக்காகப் பரிந்துரைப்பாராக.

**ஆங்கில மூலம் :** The New Leader ( Vol. 124, No. 03, pp. 12-13)

**தமிழாக்கம் :** தமிழக மறைக்கல்விப் பணிக்குழு

# திருவழிபாட்டில் பண்பாட்டுமயமாக்கல்

பாளையங்கோட்டை மறைமாவட்டம், மகாராசநகர் பங்கு, தூய யூதா ததேயு திருத்தலத்தில், சனவரி மாதம் 30-ஆம் நாள், ஞாயிற்றுக்கிழமை பொதுநிலையினருக்கான, "திருவழிபாட்டில் பண்பாட்டுமயமாக்கல்" என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது. மொத்தம் 60 பேர் கலந்து கொண்டார்கள். நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு நான்கு கேள்விகளின் அடிப்படையில் கலந்தாய்வு நடைபெற்றது. கேள்விகளும் பதில்களும்.

**1. பண்பாடு என்றால் என்ன?**

பண்பாடு என்பது குறிப்பிட்ட பகுதிகளில் மக்கள் பின்பற்றுகிற பழக்க வழக்கங்கள். ஒவ்வொரு பகுதிக்கும் குறிப்பிட்ட பண்பாடு உண்டு. சரி, தவறு என்று சொல்வதற்கில்லை. பழக்க வழக்கத்திற்கு ஏற்ப, காலச்சூழலுக்கு ஏற்ப பண்பாடுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**2. திருவழிபாட்டில் பண்பாட்டுமயமாக்கல் தேவையா?**

பெரும்பாலோரின் கருத்துக்கள் தேவையானதுதான் என்பதைச் சுட்டிக்காட்டின. அப்போதுதான் மக்களின் ஈடுபாடு அதிகமாகும்.

**3. தேர், சப்பரம் இழுப்பது பற்றி உங்கள் கருத்து?**

இது ஒருவகை பக்தி முயற்சி, நமது பக்தியை வளர்ப்பதோடு, பிற சமய மக்கள் மத்தியிலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. எனவே தேர், சப்பரம் எடுக்கும்போது பொருளுள்ள விதத்திலும் பக்தியான முறையிலும் நடந்துகொள்ள வேண்டும்.

**4. குடும்ப விழாக்களுக்கு நாள், நேரம் பார்ப்பது பற்றி உங்கள் கருத்து என்ன?**

இறைவன் படைத்த நாள், நேரம் அனைத்தும் நல்லவையே. எல்லாம் அவருடையன. இருந்தாலும் பழக்க தோசம் விடுவதில்லை. இறைவனில் நம்பிக்கைக் குன்றியோர் மட்டுமே நாள், நேரம் பார்ப்பார்கள்.

பின்பு தமிழக திருவழிபாட்டுப் பணிக்குழுவின் செயலர் அருள்பணி. ரோலிங்டன் அவர்கள் விவிலியப் பின்னணியில், திருச்சபைத் தந்தையரின் பார்வையில் பண்பாட்டுமயமாக்கல் பற்றி எடுத்தியம்பினார். இறுதியில் இந்திய திருச்சபையின் 12 அம்சங்களையும் அவற்றில் தமிழக ஆயர்கள் அனுமதித்துள்ள 9 அம்சங்களையும் எப்படி வழிபாட்டில் நடைமுறைப்படுத்தலாம் என்பதுபற்றி எடுத்துரைத்தார். நடைமுறைச் சிக்கல்கள், கேள்விகள், விளக்கங்கள், தெளிவுகளோடு கருத்தரங்கு நிறைவுற்றது. அனைத்து நிகழ்வுகளையும் பாளை மறைமாவட்ட திருவழிபாட்டுப் பணிக்குழுவின் செயலரும் மகாராசநகர் பங்குத் தந்தையுமான அருள்பணி. செயபாலன் அவர்கள் ஏற்பாடு செய்து ஒருங்கிணைத்தார்.

**அருள்திரு. செயபாலன், அ.**

*செயலர், திருவழிபாட்டுப் பணிக்குழு*

*பாளை மறைமாவட்டம்*

# மறையுரை மொட்டுகள்

அருள்பணி. வ. இரபேல் - திண்டிவனம்

## பொதுக்காலம்: 9-ம் ஞாயிறு (06.03.2011)

### இச 11:18, 26-28, 32; உரோ 3:21-25அ, 28; மத் 7:21-27

ஊற்றுப்பேனா (fountain pen) உற்பத்தி செய்யும் ஒரு பெரிய நிறுவனத்தின் விற்பனையாளர் ஒருவர் ஒரு கடைக்குச் சென்று பேசி 500 பேனாக்களுக்கு ‘ஆர்டர்’ வாங்கிவிட்டார். ஆனால் அவர் தம்முடைய குறிப்பேட்டில் அந்த ‘ஆர்டரை’ எழுதும்போது கடை உரிமையாளர், “ஆர்டரை ரத்து செய்துவிடுங்கள்!” என்று கூறிவிட்டார். திகைத்துப்போன விற்பனையாளர் எதுவும் பேசாமல் போய்விட்டார். பின்னர், ‘ஆர்டரைக்’ கடை உரிமையாளர் ரத்துசெய்ததற்கான காரணத்தைக் கடை ஊழியர் ஒருவர் வழியாக அந்த விற்பனையாளர் அறிந்துகொண்டார். கடை ஊழியர் சொன்னார்: “நீங்கள் உங்கள் ‘ஃபவுண்டன்’ பேனாவின் சிறப்புபற்றி அரைமணி நேரம் பேசினீர்கள்; அது எல்லா நேரங்களிலும் பயன்படுத்தப்படக்கூடிய பேனா என்றும் சொன்னீர்கள்; ஆனால் நீங்கள் ‘ஆர்டரை’ எழுதுவதற்கு உங்கள் ‘பால்பாயின்ட்’ பேனாவை எடுத்தீர்கள்! அதுதான் உரிமையாளரின் மனத்தை மாற்றிவிட்டது. உங்கள் உற்பத்திப் பொருளைக்குறித்து உங்களுக்கே நம்பிக்கையில்லை என்று தெரிகிறது!” விற்பனையாளரின் சொல்லுக்கும் செயலுக்கும் பொருத்தம் இல்லாமற்போய்விட்டது.

இன்றைய நற்செய்தியில் இயேசு, “என்னை நோக்கி, ‘ஆண்டவரே, ஆண்டவரே,’ எனச் சொல்பவரெல்லாம் விண்ணரசுக்குள் செல்வதில்லை; மாறாக, விண்ணுலகிலுள்ள என் தந்தையின் திருவுளத்தின்படி செயல்படுபவரே செல்வர்” (மத் 7:21) என்று கூறுகிறார். இதைக் கூறுவதற்குமுன் தந்தையின் திருவுளம் யாது என்பதை இயேசு தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார். அவர் எண்பேறுகளைக் குறித்துப் பேசத்தொடங்கினார்; அதற்குப் பின்னர் திருச்சட்டம், சினங்கொள்ளுதல், விபசாரம், ஆணையிடுதல், பழிவாங்குதல், பகைவரிடம் அன்பாயிருத்தல், அறச்செயல்கள், இறைவேண்டல், நோன்பு இருத்தல், தீர்ப்பு அளித்தல், மனித உறவுகள் ஆகியவற்றை எல்லாம்பற்றிப் பேசினார். அவற்றைக்குறித்த அறிவுரைகள் எல்லாம் இவ்வுலகில் கடைப்பிடிக்கப்பட வேண்டியவை. நம்முடைய போராட்டம் காற்றோடு நடப்பதன்று. அது நிகழ்வுலகில் நடப்பது. எனவே, ‘ஆண்டவரே, ஆண்டவரே,’ என்றும், ‘கிறிஸ்தவமே, கிறிஸ்தவமே’, என்றும், திருச்சபையே, திருத்தந்தையே, ஆயரே’ என்றும் சொல்பவரெல்லாம் விண்ணுல்கிற்குச் சென்றுவிடுவதில்லை. ஆனால் கையூட்டு வாங்காமலும் சகோதரரை மன்னித்து ஏற்றுக்கொண்டும் நீதியை நிலைநாட்டியும் விண்ணகத் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே விண்ணகம் செல்லவியலும். கிறிஸ்தவர்களாகிய நாம் வழிபாட்டிற்குச் செல்கிறோம். ஞாயிற்றுக்கிழமை என்பது கடன்திருநாள் என்பதால் கட்டாயம் திருப்பலியில் பங்கேற்கவேண்டும் என்பது திருச்சபைக் கட்டளை. “ஆண்டவரே இரக்கமாயிரும்! கிறிஸ்துவே இரக்கமாயிரும்!” என்று திருப்பலியில் கட்டாயம் மன்றாடுகிறோம். ஆனால்

மலைப்பொழிவில் இயேசு கூறும் சொற்களை நம்மில் எத்தனைப்பேர் கடைப்பிடிக்க குறைந்தபட்ச முயற்சியாவது செய்கிறோம்? சொற்பொழிவாளர் ஒருவர் பேசிக்கொண்டிருக்கும்போது ஒரு குழந்தை அழத் தொடங்கியது. குழந்தையை வெளியே எடுத்துச்செல்ல அதன் தாய் முயன்றபோது, "பரவாயில்லை, மேடம்! உங்கள் குழந்தை எனக்குத் தொந்தரவாக இல்லை!" என்று சொற்பொழிவாளர் சொன்னார். "இருக்கலாம்! ஆனால் நீங்கள் என் குழந்தைக்குத் தொந்தரவாக இருக்கிறீர்களே!" என்று தாய் சொன்னாள். சொல்லுக்கும் செயலுக்கும் தொடர்பு இல்லை.

தெர்த்துல்லியன் என்பவர் முதலில் பிறமதத்தைச் சார்ந்தவராயிருந்து, பின்னர் கிறிஸ்தவராக மாறியவர். அவர் பெரிய எழுத்தாளராக இருந்து ஏராளம் இறையியல் மற்றும் விவிலிய விளக்க நூல்களை எழுதியவர். ஆயினும் அவர் இப்படிச் சொன்னார்: "நானும் என்னோடு சேர்ந்த பலரும் பிறமதத்திலிருந்து கிறிஸ்துவிடம் வந்தது பல நூல்களாலும் மறையுரைகளாலும் அன்று; மாறாக, கிறிஸ்தவர்கள் எப்படி வாழ்கிறார்கள் என்றும் எப்படி இறக்கிறார்கள் என்றும் பார்த்ததால்தான்!"

இயேசு எல்லாவற்றிலும் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுவதில் குறியாய் இருந்ததை நாம் நற்செய்தி நூல்களில் காண்கிறோம். அவர் மானிட உடலேற்ற உடனே, கன்னிமரியாவின் வயிற்றில் இருக்கும்போதே, "என் கடவுளே, உமது திருவுளத்தை நிறைவேற்ற, இதோ வருகின்றேன்!" என்று தந்தையிடம் கூறினார் (எபி 10:7). தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுவது அவருக்கு உணவையும் பானத்தையும்விட மேலானது: "என்னை அனுப்பியவரின் திருவுளத்தை நிறைவேற்றுவதும் அவர் கொடுத்த வேலையைச் செய்துமுடிப்பதுமே என் உணவு" (யோவா 4:34). உடலளவில் இயேசுவின் உறவினராக இருப்பதால் ஒருவர் இறையாட்சியில் நுழைவதில்லை; தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றும் எவரும் இறையாட்சிக்குள் நுழையலாம் (மத் 12:50). இயேசு கற்றுக்கொடுத்த இறைவேண்டலின் மையமாக "உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவதுபோல மண்ணுலகிலும் நிறைவேறுக!" (மத் 6:10) என்ற வேண்டுதலை அவர் வைத்தார். இந்த வேண்டுதல் மற்ற எல்லா வேண்டுதல்களையும் உள்ளடக்கியது; இது இல்லாவிடில் மற்ற எல்லா வேண்டுதல்களும் பொருளில்லாமல் போகின்றன. கெத்சமெனித் தோட்டத்தில் இயேசு மனக்கலக்கத்துடனும், அதேநேரம் தீர்மானத்துடனும், "உமது திருவுளத்தின்படியே ஆகட்டும்!" (மத் 26:42) என்று சொன்னார். இயேசு தந்தைக்கு முற்றிலும் கீழ்ப்படிந்ததே எல்லாருக்கும் மீட்பைக் கொண்டுவந்தது; அவருக்கோ அது உயிர்ப்பின் மாட்சியையும் 'ஆண்டவர்' என்ற பெருமையையும் பெற்றுத்தந்தது.

கடவுளின் வார்த்தையைக் கேட்பதும் அதன்படி நடப்பதும் எவ்வளவு முக்கியமானவை என்பதை வலியுறுத்த இருவகை அடித்தளங்கள் குறித்த உவமையை இயேசு கூறுகிறார். பாறைமீது கட்டும் வீடு எல்லாவித இயற்கைப் பேரழிவுகளில் இருந்தும் பாதுகாக்கப்படும்; மணல்மீது கட்டும் வீடு பேரழிவைச் சந்திக்கும். இதில் வீடு என்பது நம்முடைய வாழ்வைக் குறிக்கும்; பாறை என்பது கிறிஸ்துவைக் குறிக்கும்; மணல் என்பது நம்முடைய உறுதியற்ற நிலைப்பாடுகளைக் குறிக்கும்; புயல் என்பது எல்லாவகைச் சோதனைகளையும் குறிக்கும். இயேசுவில் வாழ்க்கை என்னும் வீட்டைக் கட்டுபவர்களே சோதனைகளில் நிலைத்துநிற்பார்கள்.

புனித அகுஸ்தீனார் இவ்வாறு எழுதினார்: "உன் உதவியின்றிக் கடவுள் உன்னைப் படைத்தார்; ஆனால், உன்னுடைய உதவியின்றி உன்னை அவர் மீட்கமாட்டார்."

# தவக்காலம்: முதல் ஞாயிறு (13.03.2011)

## தொநூ 2:7–9; உரோ 5:12–19; மத் 4:1–11.

"ஆதாமும் ஏவாளும் சீனாவில் படைக்கப்பட்டிருந்தால் நாம் இன்று எந்தத் துன்பத்திற்கும் ஆளாகியிருக்க மாட்டோம்" என்று ஒருவர் சொன்னார். ஏன் என்று கேட்டதற்கு அவர் சொன்னார்: "ஏதேன் தோட்டத்தில் பாம்பு விலக்கப்பட்ட கனியைக் காட்டி ஏவாளைச் சோதித்தபோது, கனிக்குப் பதிலாகப் பாம்பை ஏவாள் சாப்பிட்டிருப்பாள்; பாவமும் உலகில் புகுந்திருக்காது!"

உண்மையில் பாம்பு சூழ்ச்சி செய்திருந்தாலும் முதல் பெற்றோர் கடவுளின் கட்டளையை நன்கு அறிந்தே இருந்தனர். ஆயினும் கடவுளைப்போல ஆகிவிடவேண்டும் என்ற ஆசையால் மனமொத்தே விலக்கப்பட்ட கனியை உண்டு, கடவுளின் கட்டளையை மீறினார்கள். கனியை உண்டது ஓர் உருவகம்தான். அக்காலத்தில் மாந்திரீகம் மூலம் கடவுளின் அறிவையும் திட்டங்களையும் அறிந்திடச் சிலர் முனைந்ததை வைத்து இந்த உருவகக்கதை உருவாகியிருக்கலாம். பாம்பு என்பது கீழுலகின் பல்வேறு மறைபொருள் வல்லமைகளுடன் தொடர்புடையது என்பது பழங்காலச் சிந்தனையாகும். முதல் பெற்றோரைச் சோதித்த பாம்பு அலகைதான் என்பது சாஞா 2:24; யோபு 1; திவெ 12:9 ஆகிய பகுதிகளிலிருந்து நமக்குத் தெரிகிறது. எனினும் மனித வாழ்வில் காணப்படும் தீமையை இது சரியாய்ப் பிரதிபலிக்கிறது. எப்படியிருப்பினும், அலகையின் அல்லது தீமையின் சோதனையை முதல் பெற்றோரால் வெல்ல இயலவில்லை.

இரண்டாம் வாசகத்தில் பவுலடியார், "ஒரே ஒரு மனிதன் வழியாய்ப் பாவம் இந்த உலகத்தில் நுழைந்தது" என்கிறார் (உரோ 5:12). 'பாம்புக்குப் பல்லில்தான் விஷம்; சில மனிதருக்கு உடலெங்கும் விஷம்!' என்று சொல்வார்கள். சில மனிதர்கள் அடுத்தவர்களைப்பற்றி, கொஞ்சமும் மனச்சாட்சி இல்லாமல் விஷத்தைக் கொட்டுவார்கள். அது மிகக் கொடுமையாய் வேலைசெய்து பலரது வாழ்வை அழித்துவிடும். முதல் பெற்றோரும் இவ்வாறே ஏதேன் தோட்டத்திலிருந்து விரட்டப்பட்டார்கள். சில மனிதர்கள் சில காரியங்களை நல்லதுபோல் தோன்றுமாறு மிகமிகச் சூழ்ச்சியாய்ப் பேசுவர்கள். பாம்பும் உளவியல் முறையில்தான் ஏவாளை ஏமாற்றியது. "கடவுள் உங்களிடம் தோட்டத்திலுள்ள எல்லா மரங்களிலிருந்தும் உண்ணக்கூடாது என்றது உண்மையா?" என்று அது கேட்டது (தொநூ 3:1). பாம்பு இப்படி மிகைப்படுத்திக் கேட்டது கடவுள் அவ்வளவு நல்லரல்லர் என்ற கருத்துருவைத் தோற்றுவிக்கிறது என்பதால் ஏவாள் கடவுள் சார்பாகப் பேசுகிறாள். தோட்டத்தின் நடுவிலுள்ள மரத்தின் கனியை மட்டும்தான் உண்ணக்கூடாது எனக் கடவுள் தடைவிதித்ததாக அவள் கூறுகிறாள். ஆனால் இப்படிக் கடவுள் சார்பாகப் பேசும் ஏவாளும் மிகைப்படுத்திப் பேசுகிறாள். "அதைத் தொடவும் கூடாது" என்கிறாள். இதனால், தொடவும்கூட அனுமதிக்காத கடவுள் நல்லவரல்லர்போலும் எனும் கருத்துரு தோன்றிவிடுகிறது. அதற்கேற்ப பாம்பு, "நீங்கள் அதை உண்ணும் நாளில் உங்கள் கண்கள் திறக்கப்படும்; நீங்கள் கடவுளைப்போல் நன்மை தீமையை அறிவீர்கள்!" என்று பொய் சொல்லுகிறது. அதுமட்டுமன்று! அவர்கள் கடவுளைப்போல் ஆவார்கள் என்பது கடவுளுக்கும் தெரியும் என்றும் கூறுகிறது. ஆக, இது தெரிந்துதான் கடவுள் தங்களுக்குத் தடைவிதித்திருக்கிறார் என எண்ண வைத்துவிடுகிறது சாத்தான். "கடவுள்

உருவாக்கிய காட்டுவிலங்குகளில் எல்லாம் பாம்பு மிகவும் சூழ்ச்சிமிக்கதாக இருந்தது" என்று தொநூ 3:1-ல் ஆசிரியர் சொல்வது உண்மையாயிற்று. கனியை உண்ணுமாறு கட்டாயப்படுத்தாமல், ஏவாளின் தீர்மானத்திற்கே விட்டுவிட்டு இடத்தைவிட்டு அகன்றுவிடுகிறது பாம்பு. இங்கு அதன் 'ராஜதந்திரம்' பளிச்சிடுகிறது. கட்டாயப்படுத்தும்போது நல்லவர்கள் எதிர்ப்பார்கள். ஆனால் சூசகமாகச் சொல்லிவிட்டுச் செல்லும்போது அந்த வாக்கு வேலைசெய்யும். மனிதரில் பலர் இப்படித்தானே தந்திரமாக வேலைசெய்கிறார்கள். அனைத்துக் கெடுமதிகளையும் செய்துவிட்டு, 'எனக்கும் இதற்கும் தொடர்பில்லை!' என்று ஒதுங்கிநிற்பார்கள்.

ஒரு பெண் இன்னொரு பெண்ணிடம், "நீ ஏன் ஜேம்சுடன் செய்துகொண்ட திருமண நிச்சயதார்த்தத்தை முறித்துக்கொண்டாய்?" என்று கேட்டாள். "அவன் என்னை ஏமாற்றிவிட்டான்!" என்று மற்றவள் சொன்னாள். "எப்படி?" என்று கேட்டபோது அவள் சொன்னாள்: "தான் ஒரு இதய மற்றும் ஈரல் 'ஸ்பெஷலிஸ்ட்' என்று அவன் சொல்லியிருந்தான்; கடைசியில் பார்த்தால் அவன் கறிக்கடையில் வேலைபார்ப்பவன்!" பாம்பு சென்னது முற்றிலும் பொய்யன்று! 'கண்கள் திறக்கப்படும்' என்று சென்னதுபோல அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டன. ஆனால் அது கடவுளைப்போல நன்மை தீமையை அறிவதற்கன்று! மாறாக, அவர்கள் தங்கள் ஆடையற்ற நிலையின் அவமானத்தை உணர்வதற்காகவே! அரைகுறை உண்மை அல்லது பாதி உண்மையைச் சொல்லிப் பலர் எவ்விதமாய் வஞ்சிக்கிறார்கள்! ஆக, மனிதர்களின் தீமையே இங்குப் பாம்பாகச் சித்தரிக்கப்படுகிறது எனலாம்.

இயேசுவுக்கு நேர்ந்த மூன்று சோதனைகள் இன்றைய நற்செய்தியில் சொல்லப்பட்டுள்ளன. ஆனால் அவை எல்லாச் சோதனைகளையும் உள்ளடக்கியவை. முதல் சோதனை உடல்சார்ந்த தேவைகளை நிறைவேற்றுதல் குறித்ததாகும். இது கடவுளின் பராமரிப்பினாலும் சாதாரண மனிதச் சூழலிலும் இருக்கும் வழிமுறைகளைப் பயன்படுத்தாமல் புதுமைகள் வழியாக உடல் தேவைகளை நிறைவேற்றிடத் தேடுதலுக்கான சோதனையாகும். இரண்டாவது சோதனை வீண் பகட்டு முதலியவற்றைத் தேடுதல் குறித்ததாகும். மூன்றாவது சோதனையில் அலகை உலக அரசுகள் அனைத்தையும் காட்டி, தன்னைத் தெண்டனிட்டு வணங்குமாறு கேட்கிறது. இது மட்டுமிறிய உலகப் பற்றிற்கான சோதனையாகும். இவை எல்லா மானிடரையும் தாக்கும் சோதனைகள். இயேசு மனிதர் என்ற முறையில் இந்தச் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டார். ஆயினும் அவர் அவற்றை வெற்றிகொண்டு கடவுளின் மகன் என்பதை எண்பித்தார். உண்மையில், இச்சோதனைகள் அவர் கடவுளின் மகன் என்பதை உறுதிப்படுத்துவதற்கு ஆனவையே. திருமுழுக்கின்போது, "என் அன்பார்ந்த மைந்தர் இவரே!" என்று வானத்திலிருந்து அறிவிக்கப்பட்டது (மத் 3:17). அலகையும், "நீர் இறைமகன் என்றால்..." என்று கூறியே சோதிக்கத் தொடங்கியது (4:3, 6).

முதல் பெற்றோர் கடவுளின் உருவிலும் சாயலிலும் படைக்கப்பட்டவர்கள் (தொநூ 1:26). ஆயினும் அலகையின் வலையில் வீழ்ந்துவிட்டார்கள். கடவுளின் மகனாகிய இயேசு அலகையை வென்றார். நாம் திருமுழுக்கினால் கடவுளின் பிள்ளைகளாகத் தத்தெடுக்கப்பட்டிருக்கிறோம். அந்தப் பெருமையை சோதனைகளின்போதும் துன்பங்களின்போதும் எப்படி நிலைநாட்டுகிறோம்? நம்மில் இருக்கும் தீமையின் கவர்ச்சியை நாம் எவ்வாறு வெல்கிறோம்?

# தவக்காலம்: 2-ம் ஞாயிறு (20.03.2011)

## தொநூ 12:1-4; 2திமொ 1:8-10; மத் 17:1-9.

சாத்தானைப்பற்றிய கதை ஒன்று இவ்வாறு உள்ளது: சாத்தான் ஒருமுறை தன்னுடைய தொழிலை விட்டுவிட நினைத்தது. தன்னுடைய தொழிலுக்குப் பயன்பட்ட கருவிகளையெல்லாம் மலிவுவிலையில் விற்றுவிடத் தீர்மானித்தது: மோசடி, பகைமை, பொறாமை, வன்மம், ஏமாற்று, சிற்றின்பம் போன்ற பலவற்றையும் அவற்றின் விலைக்குறிப்போடு அழகாகப் பார்வைக்கு வைத்தது. ஆனால் அவற்றின் நடுவே மிகவும் பழையதாகிவிட்ட ஆப்புவடிவிலான ஒன்று வைக்கப்பட்டிருந்தது; அதனுடைய விலையோ மிகவும் அதிகமாயிருந்தது. "அது என்ன?" என்று சாத்தானிடம் கேட்கப்பட்டபோது, "அதுதான் அவநம்பிக்கை!" என்று பதில் சொன்னது சாத்தான். "அது ஏன் அதிக விலையாக உள்ளது?" என்று கேட்கப்பட்டபோது, "ஏனென்றால் மற்ற எல்லாக் கருவிகளையும்விட இதுதான் என்னுடைய தீய வேலையை மிகவும் நன்றாகச் செய்யும்; இதை வைத்துப் பல மனிதர்களுடைய வாழ்வை மதிப்பில்லாமல் செய்ய என்னால் முடியும்; அவர்களை நான் ஒன்றும் செய்ய இயலாதவர்களாக்கி, பயனற்றவர்களாக மாற்றிட இயலும்; இதில் வேடிக்கை என்னவென்றால் நான்தான் இந்தக் கருவியைப் பயன்படுத்துகிறேன் என்று அந்த மனிதர்களுக்கே தெரியாது!" என்று சாத்தான் பதில் சொன்னது.

"சாத்தானுக்கு ஒரே ஓர் ஆயுதம்தான் கொடுக்கப்படும் என்று இருந்தால் அது 'அவநம்பிக்கை ஊட்டுதலாகத்தான் இருக்கமுடியம்'" என்று லீவிஸ் (C. S. Lewis) என்பார் கூறுவார்.

கடந்தவார நற்செய்தியில், அலகை இயேசுவை மூன்றுமுறை சோதித்தது சொல்லப்பட்டது; மூன்றிலும் இயேசு வென்றார். ஆனால் அலகை அவ்வளவு எளிதாக அவநம்பிக்கை அடைந்துவிடாது. அது தொடர்ந்து முயன்றுகொண்டேதான் இருக்கும். இயேசுவின் பணிவாழ்வில் அலகை இன்னுமோர் ஆயுதத்தை எடுத்துவிட்டது. இயேசுவைப்பற்றிய பேதுருவின் நம்பிக்கை அறிக்கைக்குப்பின் (மத் 16:13-20) இயேசு தம் சாவை முதன்முறை அறிவித்தார் (மத் 16:21-28). பேதுரு முதலிய சீடர்களுக்கு அது அதிர்ச்சியாக இருந்தது. அது இயேசுவுக்கும் அதிர்ச்சியாகவே இருந்திருக்கும். எனவே அவருக்கு நம்பிக்கையூட்டி, மனத்தளர்ச்சியைப் போக்க உருமாற்ற நிகழ்வு தேவைப்பட்டது. இயேசுவுக்கும் மனத்தளர்ச்சி இருந்தது என்பது நமக்கு அதிர்ச்சியாக இருக்கவேண்டியதில்லை. இயேசு துன்புறவும் சாகவும் தயாராகவே இருந்தார் என்பது தெளிவாகத் தெரிகிறது (16:21). ஆனாலும் எல்லா மானிடரையும்போல அவர் சாவைக் கண்டு அஞ்சினார். இந்த அச்சத்தை கெத்சமெனித் தொட்டத்தில் அவர் வெளிப்படுத்தியுள்ளதால் நாம் புரிந்துகொள்ளலாம் (26:36-46). தந்தையின் அன்பு தரும் உறுதிப்பாடுதான் இயேசு தம்முடைய பணியைச் செய்து முடித்திட வைக்கும். ஆனால் அலகை இடையில் தன் சோதனையைத் தொடர்ந்து, இயேசுவுக்கு மனத்தளர்ச்சியை ஏற்படுத்தியது. இயேசு தம் சாவை அறிவிக்கையில், அதைத் தடுத்திடப் பேதுரு முயன்றபோது, "என் கண்முன் நில்லாதே சாத்தானே!" என்று இயேசு அவரைக் கடிந்துகொண்டார். பேதுரு வழியாக இயேசுவுக்குத் தடைபோடவும், அவருக்கு மனத்தளர்ச்சியையும் அவநம்பிக்கையையும் ஏற்படுத்தவும் முயன்ற சாத்தான் இப்போதும்

தன் வேலையைத் தொடர்கிறது. ஆனால் இயேசுவுக்கு நேர்ந்த உருமாற்றம் அதை முறியடித்துவிடுகிறது.

சாத்தான் இந்த அவநம்பிக்கை மூலம் பேதுருவையும் வீழ்த்த முயன்றது; இயேசுவை விசாரிக்கும்போது பேதுரு அவநம்பிக்கையுற்று அவரை மறுதலித்தார். ஆயினும் இயேசுவின் கனிவுமிக்க பார்வையால் அதிலிருந்து மீண்டுவிட்டார் (26:69–75). சாத்தான் யூதாஸையும் இந்த அவநம்பிக்கையால் சோதித்தது. ஆனால் அவன் அதிலேயே வீழ்ந்து அழிந்துவிட்டான்; ஆம்! அவன் அவநம்பிக்கையால் தற்கொலை செய்துகொண்டான்.

இயேசு உருமாறியதுபற்றிய குறிப்பு அவர் ஆட்சிசெலுத்துபவராக வருவதற்கான (காண். 16:28) ஒரு முன்னோட்டமாகும். இது இயேசு உயிர்த்தபின் கொடுத்த காட்சிகளுள் ஒன்று என்றும், அது இயேசுவின் பணிவாழ்வில் நடந்ததாக இங்கு மாற்றப்பட்டுள்ளது என்றும் சில அறிஞர்கள் கூறிவந்தார்கள். ஆனால் உயிர்ப்புக்காட்சிகள் குறித்த வருணனைகளுக்கும் இதற்கும் பெரிய ஒற்றுமை இல்லை. இயேசுவின் உருமாற்றம் என்பது வரலாற்றில் உண்மையாகவே நடந்த காட்சிபூர்வமான ஒன்றாகும். அது எப்படிப்பட்டது என்பதை மட்டும் நம்மால் விளக்கமாகப் புரிந்துகொள்ள இயலாது. இதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள 'மெற்றெமொர்ஃபோதே' என்ற கிரேக்கச் சொல் வடிவ மற்றும் தோற்றமாற்றத்தைச் சுட்டுகிறது. இது நடந்த இடம் தாபோர் மலை என்று மரபுவழியாக நம்பப்பட்டு வருகிறது. கடவுள் மோசேக்குச் சீனாய் மலையில் காட்சிகொடுத்ததை இது நினைவூட்டும்.

மத்தேயு இந்த வருணனையைத் தருவதின் முக்கிய நோக்கம் சீடர்களிடம் காணப்பட்ட எதிர்வினையைக் காட்டுவதே! மூன்று கூடாரங்களை அமைத்திடப் பேதுரு இயேசுவிடம் அனுமதி கோருகிறார் (17:4). இறையாட்சி மாட்சியுடன் வரும்வரை அவர்கள் அனைவரும் அங்கேயே இருந்துவிட விரும்பினார்கள் என்று தெரிகிறது. திருமுழுக்கின்போது இயேசு கடவுளின் மகன் என்று அறிவிக்கப்பட்டதைப்போன்று (3:17) இங்கும் இயேசு அறிவிக்கப்படுகிறார்: "என் அன்பார்ந்த மைந்தர் இவரே!" (17:5). இதுவும் சீடர்களின் எதிர்பார்ப்பை அதிகரிக்கிறது. ஆனால் சீடர்கள் அங்கேயே இருந்துவிட இயலாது. அவர்கள் இயேசுவின் சாவைச் சந்தித்துத்தான் ஆகவேண்டும்; அவர்களும் இயேசுவைப்போல இரத்தம் சிந்தி உயிர்விட்டுத்தான் ஆகவேண்டும். ஆயினும் இப்போதைக்கு அது சீடர்களுக்கு இயேசுவுடைய மாட்சியின் ஒரு முன்சுவையைக் காட்டுவதால் அவநம்பிக்கையை ஒழித்து, நம்பிக்கை கொள்கிறார்கள். அன்று நடந்த நிகழ்வைப் பேதுரு பல்லாண்டுகளாக நினைவுகூர்ந்து, மனத்தளர்ச்சிகளில் தைரியம் பெற்றார். தொடக்கக் கிறிஸ்தவர்களுக்கும் அதை நினைவூட்டி அறிவுரைகள் வழங்கி உறுதியூட்டினார்: "சகோதர சகோதரிகளே! நீங்கள் அழைக்கப்பட்டவர்கள்; தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்...இவ்வாறு உங்களுக்கு நினைவுறுத்தி விழிப்பூட்டுவது முறையெனக் கருதுகிறேன்...தந்தையாகிய கடவுளிடமிருந்து மதிப்பும் மாட்சியும் பெற்றார். தூய மலையில் அவரோடு இருந்தபோது விண்ணிலிருந்து வந்த இக்குரலொலியை நாங்களே கேட்டோம் (2பேது 1:10, 13, 17–18). விசுவாசத்திற்காகத் தொடக்கக் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டபோது இயேசுவின் உருமாற்ற நிகழ்வை நினைவுகூர்ந்து மனத்தளர்ச்சியை நீக்கினார்கள்.

சில நேரங்களில் நம் அனைவருக்கும் வாழ்க்கை மிகவும் இருளாகத் தோன்றலாம். அப்படிப்பட்ட கட்டங்களில் நமக்கும் 'தாபோர் மலை' அனுபவம் தேவை. நம்முடைய மதிப்பையும் நம்முடைய வேதனை, தியாகம் ஆகியவற்றின் பொருளையும் நாம் அனுபவித்தாக வேண்டும். தியாகங்களுக்குப் பொருள் இல்லாவிடில் அவை நம்மை அழித்துவிடும் ஆபத்து உண்டு. அவற்றிற்குப் பொருள் ஏற்படும்போது அவை நம்மை உருமாற்றும். அன்பே அவற்றிற்குப் பொருளைக் கொடுக்கின்றது. நம்முடைய 'தாபோர் மலை' அனுபவத்தை நம்முடைய உறவினர்களும் நண்பர்களும் நமக்குத் தரலாம். வில்லியம் பார்க்ளே எனும் விவிலிய அறிஞர் இவ்வாறு எழுதுகிறார்: "மனிதருடைய முக்கியக் கடமைகளில் ஒன்று ஊக்கமூட்டும் கடமையாகும்...மனிதர்களுடைய உயர் இலக்கியல்களைக் குறித்துச் சிரிப்பது எளிது; அவர்களுடைய ஆர்வத்தின்மீது குளிர்ந்த நீரை ஊற்றுவது எளிது; பிறரை மனத்தளர்ச்சி அடையச்செய்வது எளிது; இவ்வுலகம் மனத்தளர்வு அடையச்செய்வோரால் நிறைந்திருக்கிறது. ஒருவருக்கொருவர் ஊக்கமூட்டும் கிறிஸ்தவக் கடமை நமக்கு உண்டு. பலநேரங்களில் ஒரு புகழ்ச்சிச்சொல், நன்றிவார்த்தை, பாராட்டுச்சொல் அல்லது சிரிப்பூட்டுதல் என்பது ஒருவரை நிமிர்ந்து நிற்கச் செய்துள்ளது. இத்தகு வார்த்தையைப் பேசும் மனிதர் பேறுபெற்றவர்."

ஆயினும் அதற்கு மேலாகக் கிறிஸ்துவில் கொண்ட நம்பிக்கையும் செபமும் நமக்குத் 'தாபோர் மலை' அனுபவத்தைத் தருகின்றன. இயேசுவின் வாழ்வு, சாவு, உயிர்ப்பு ஆகியவற்றில் நம்முடைய வாழ்வுக்கும் சாவுக்கும் பொருளைக் காண்கிறோம். ஆயினும் இந்தப் பெரும் நம்பிக்கையானது இயேசுவை எருசலேமுக்குப் போகும் சாலையில் சந்திப்போருக்கே வழங்கப்படுகிறது. ஆனால் அங்குதான் அலகை தன் வேலையைத் தொடங்குகின்றது. இயேசுவுக்கே மனத்தளர்வை ஏற்படுத்திய அலகை மனிதர்களை எளிதாக விட்டுவிடுவதில்லை. முக்கியமாக, துன்பம், கடின உழைப்பு, தொடர்தோல்விகள், கடும் எதிர்ப்புகள் நடுவில் அலகையின் இந்த அவநம்பிக்கையூட்டும் வேலை எளிதாகிவிடுகிறது. ஆனால், அது சாத்தான் செய்யும் வேலையா? அல்லது மனிதரில் ஒளிந்திருக்கும் தீமையா?

## தவக்காலம்: 3-ம் ஞாயிறு (27.03.2011)

### விப 17:3-7; உரோ 5:1-2, 5-8; யோவா 4:5-42.

விண்ணுலகில் ஆண்கள் பலர் ஓரிடத்தில் குழுமியிருந்தார்கள். அவர்களுள் மனைவியருக்குப் பயந்து வாழ்ந்தவர்களை ஒரு பிரிவாகவும் மனைவியருக்குப் பயப்படாமல் வாழ்ந்தவர்களை இன்னொரு பிரிவாகவும் பிரிக்கக் கடவுள் விரும்பினார். இறுதியில் பார்த்தால் மனைவியருக்குப் பயந்து வாழ்ந்தவர்களே பெருங்கூட்டமாக இருந்தார்கள். மற்றப் பகுதியில் ஒரே ஓர் ஆள் மட்டும் நின்றிருந்தார். நோஞ்சானாகக் காணப்பட்ட அவர் மனைவிக்குப் பயப்படாதவராக இருந்தது ஆச்சரியமாகவே இருந்தது. கடவுள் மற்றவர்களிடம் சொன்னார்: "உங்களுக்கெல்லாம் வெட்கமாக இல்லையா? ஆணைப் படைத்துவிட்டுதான் பெண்ணைப் படைத்தேன். நீங்களோ உங்கள் மனைவியருக்குப் பயந்து வாழ்ந்திருக்கிறீர்கள். ஆனாலும் இதோ! ஒருவன் தன் மனைவிக்குப் பயப்படாமல் வாழ்ந்திருக்கிறான். அவனைப் பாராட்டுகிறேன்." பின்னர் அந்த ஆளைப் பார்த்து, "நீ எப்படி உன் மனைவிக்குப் பயப்படாமல் வாழ்ந்தாய்

என்பதை இந்தக் கோழைகளுக்குச் சொல்!'' என்றார் கடவுள். அந்த ஆள் சொன்னார்: "எனக்கு ஒன்றும் தெரியாது! இந்தப் பகுதியில் நிற்குமாறு என் மனைவி சொன்னாள்! அதனால்தான் இங்கே நின்றேன்!'' இது எப்படி இருக்கு?

நகைச்சுவைக்காகப் பெண்கள் கணவர்களை அடக்கி ஆள்வதாக இப்படிப்பட்ட துணுக்குகள் உலவுவதுண்டு. வின்செனட் சர்ச்சிலிடம் சிலர், "2100–ம் ஆண்டில் உலகைப் பெண்களே ஆட்சிசெய்வார்கள் என்று பல எழுத்தாளர்கள் அறிவிக்கின்றார்கள்!'' என்றார்கள். அப்போது வின்செனட் சர்ச்சில் கண்களைச் சிமிட்டிக்கொண்டு, "அப்போதுகூடவா!'' என்று ஆச்சரியப்பட்டாராம். ஆனால் உண்மையில், வரலாற்றில் பெண்கள் அடிமைப்பட்டே இருந்துவந்துள்ளார்கள்.

இன்றைய நற்செய்தியில் இயேசு வாழ்வுதரும் தண்ணீரை ஒரு சமாரியப் பெண்ணுக்கு வழங்குகிறார். அக்காலச் சமூகத்தில் இது மரபுக்கு மாற்றானது. அப்பெண் ஒரு சமாரியப் பெண்; யூதர்களோ சமாரியரோடு புழங்குவதில்லை (யோவா 4:9). சமாரியரிலும் அப்பெண் இந்தக் கொடையைப் பெறத் தகுதியற்றவர்; ஏனெனில் அவர் ஒரு பெண். யூதர்கள் பொதுவாகப் பெண்களுடன் பொதுவிடத்தில் பேசுவதைத் தவிர்த்தார்கள். உண்மையில் இயேசு ஒரு பெண்ணுடன் பேசிக்கொண்டிருப்பதைப் பாத்து அவருடைய சீடரே வியப்புற்றனர் (4:27). பெண்களிலும் அந்தப் பெண் இயேசுவின் கொடையைப் பெறத் தகுதியற்ற பெண்; ஏனெனில் அப்பெண் சமாரியராலேயே ஒதுக்கிவைக்கப்பட்ட பெண். அப்பெண் தனியாகத் தண்ணீர் எடுக்க வந்தது இதைச் சுட்டுகிறது. அதுவும் அப்பெண் நண்பகலில் வந்துள்ளார்; மற்றப் பெண்கள் அந்த நேரத்தில் வீட்டில் உணவு தயாரித்து வீட்டிலுள்ளவர்களுக்குப் பரிமாறிக்கொண்டிருப்பார்கள். அப்பெண் மற்றப் பெண்களின் கூட்டத்தைத் தவிர்த்துள்ளார். அப்பெண் ஐந்து கணவர்களைக் கொண்டிருந்த ஒரு பாவியான பெண்.

ஆயினும் அப்படிப்பட்ட பெண்ணுக்கு நம் ஆண்டவர் அதிர்ச்சியான பல உண்மைகளைத் தெரிவித்தார். முதலில் கடவுள் உருவமற்றவர் என்ற உண்மையை அப்பெண்ணுக்கு இயேசு தெரிவிக்கிறார் (4:24). இரண்டாவதாக, கடவுளை அவரது உண்மை இயல்புக்கு ஏற்ப உள்ளத்தில்தான் வழிபடவேண்டும் என்று கூறுகிறார் (4:24). மூன்றாவதாக, தாமே மெசியா என்று இயேசு தெரிவிக்கிறார் (4:26). நான்காவதாக, இயேசுவே உலகின் மீட்பர் என்ற உண்மை தெரிவிக்கப்படுகிறது (4:42). ஐந்தாவதாக, தாம் காணாமற்போனவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பவர் என்பதை இயேசு மறைமுகமாகத் தெரிவிக்கிறார்.

அந்தச் சமாரியப் பெண்ணும் சிறிது நேரத்திலேயே பலவற்றை அறிந்துகொண்டார். அப்பெண் ஆண்டவருக்குத் திறந்த மனத்துடன் இருந்தார். அப்பெண் இயேசுவை முதலில் 'ஒரு யூதர்'' என்று அழைக்கிறார் (4:9); பின்னர் "ஐயா'' என்று அழைக்கிறார் (4:11); பின்னர் "இறைவாக்கினர்'' என்று அழைக்கிறார் (4:19); பின்னர் "மெசியா'' என்று அழைக்கிறார் (4:29). தம்முடைய மனசாட்சியை அறிந்துகொண்டவர் இயேசு என்று அப்பெண் கூறுகிறார் (4:39). இறுதியாக, அப்பெண் வழியாகப் பலர் இயேசுவே 'உலகின் மீட்பர்' என்பதை அறிந்துகொண்டார்கள் (4:42).

ஆக, இன அடிப்படையிலும் பாலின அடிப்படையிலும் சூழலினாலும் ஒதுக்கப்பட்டிருந்த ஒரு பெண் ஆண்டவர் இயேசுவால் சமத்துவம் பெற்று சிறப்பையும் பெறுகின்றார். மற்றவர்களுக்கு நற்செய்தியை அறிவித்து அவர்களையும் உலக மீட்பரிடம் கூட்டிவரும் பெரும் பணியையும் செய்கின்றார். ஆயினும் முதலில் அப்பெண் தம்முடைய பாவத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது; தம்முடைய உள்ளத்தைத் தூய்மைப்படுத்த வேண்டியிருந்தது. அதன்பின் அப்பெண் இயேசுவின் சீடர் ஆனார். ஒரு பெண், அதுவும் பாவியான ஒரு பெண், இயேசுவின் சீடராக மாறிய நிகழ்வு இங்கே சொல்லப்பட்டுள்ளது. இஸ்ரயேலில் போதகர்கள் பெண்களை நடத்திய விதம்குறித்து அறிகையில் இது ஆச்சரியமான ஒன்றுதான். "இனி உங்களிடையெ யூதர் என்றும் கிரேக்கர் என்றும், அடிமைகள் என்றும் உரிமைக் குடிமக்கள் என்றும் இல்லை; ஆண் என்றும் பெண் என்றும் வேறுபாடு இல்லை; கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள நீங்கள் யாவரும் ஒன்றாய் இருக்கிறீர்கள்" (கலா 3:28) என்ற பவுலடியாரின் வார்த்தைகளுக்கு ஏற்ப இந்நற்செய்திப் பகுதி அமைந்துள்ளது. திருச்சபை எவ்வளவுதான் உயரிய விழுமியங்களைக் கொண்டிருந்தாலும் பெண்கள் எல்லாக் காலக்கட்டங்களிலும் அடிமைப்படுத்தப்பட்டே இருந்துவந்துள்ளார்கள். அதுபோல சாதியின் அடிப்படையில் வேறுபாடுகளும் ஒதுக்கப்படுதலும் திருச்சபைக்குள் இருந்தே வந்துள்ளது. இவை அடியோடு களைந்தெறியப்பட வேண்டும்.

சமாரியப் பெண் இயேசுவைக் கண்டுகொண்டார்; கண்டுகொண்டதும் அந்தக் கண்டுபிடிப்பை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள ஆர்வங்கொண்டார். அப்பெண் தம் குடத்தை விட்டுவிட்டு ஊருக்குள் சென்று மக்களிடம் இயேசுவைப்பற்றிக் கூறி, அவர் மெசியாவாக இருக்கலாம் என்று தெரிவித்தார் (யோவா 4:29). அச்சமாரியப் பெண்ணைப்போல நாமும் கிறிஸ்துவைப் பிறருக்கு அறிவிக்கவேண்டும்: "அவருடைய பணியைச் செய்ய அவருக்குக் கைகள் இல்லை; நம்முடைய கைகளே உண்டு. மக்களை வழிநடத்திச் செல்ல அவருக்குக் கால்கள் இல்லை; நம்முடைய கால்களே உண்டு. அவர் எப்படி இறந்தார் என்பதை எடுத்துச்சொல்ல அவருக்குக் குரல் இல்லை; நம்முடைய குரலே உண்டு. அவருடைய பக்கத்தில் மக்களைக் கூட்டிச்செல்ல அவருக்கு உதவி இல்லை; நம்முடைய உதவியே உண்டு." இயேசு மெசியா என்பதையும் அவர் உலகுக்கெல்லாம் மீட்பர் என்பதையும் நாம் எடுத்துச் சொல்லவேண்டும். அந்த நற்செய்தியானது சாதி, இன, மொழி வேறுபாடுகளையும் ஆண், பெண் வேறுபாடுகளையும் செல்வர், ஏழை மற்றும் கற்றவர், கல்லாதவர் என்ற வேறுபாடுகளையும் கடந்த, அடிமைத்தனம் முற்றும் ஒழிந்த விடுதலையின் நற்செய்தியாக இருக்கவேண்டும். இதனால்தான், பாஸ்கா திருவிழிப்பில் திருமுழுக்கு வாக்குறுதிகளைப் புதுப்பிக்கும்போது, "பாவத்திற்குக் காரணமும் ஊற்றுமான தன்னலத்தையும், சாதி உணர்வையும், மொழி, இன, மத வெறிகளையும் விட்டுவிடுகிறீர்களா?" என்று குரு கேட்க, "விட்டுவிடுகிறேன்" என்று ஒவ்வொருவரும் பதில் சொல்லுகின்றோம்.

"குடிக்க எனக்குத் தண்ணீர் கொடும்" (4:8) என்று கேட்ட இயேசு வாழ்வுதரும் தண்ணீரைக் கொடுத்தார். இறுதியில் சிலுவையில் தொங்கும்போது, "தாகமாய் இருக்கிறது" (19:28) என்று கூறினார். ஆம்! எல்லா மக்களுக்காவும் அவர் தாகமாய் இருக்கிறார். எல்லா மக்களும் மீட்படைய அவர் நம் ஒவ்வொருவருடைய உதவிக்காகவும் தாகமாய் இருக்கிறார்.


## பெப்ரவரி குறுக்கெழுத்துப் போட்டியில் பரிசு பெறுபவர்கள்

1. **சகோ. ரீத்தா ஜோஸ்பின்**, *லூயிஸ் கான்வென்ட், தருமபுரி - 636 904*
2. **எ. கிளமென்டீன்,** *7. தென்கரை வீதி, கோட்டுச்சேரி, காரைக்கால்*
3. **எம். மோனிஷா**, *2 பி. வள்ளலார் முதல் தெரு, இ.பி. காலனி, விழுப்புரம்*
4. **சகோ. ஜோதி**, *ஜீசஸ் கான்வென்ட், பி.உடையாப்பட்டி, திருச்சி*

## சரியான விடை எழுதி பாராட்டுப் பெறுபவர்கள்

சகோ. லிடியானா மேரி, சகோ. பிரிஜெட் மேரி, சகோ. தெரஸா சி.ஐ.சி., சகோ. ஆரோக்கிய மேரி-அருள்ஒளி இல்லம்-திண்டிவனம், சகோ.அல்போன்சா-சுந்தரநாச்சியார்புரம், எழில் சுவின் அரசு-சுந்தரநாச்சியார் புரம், எஸ். அனிதா-சுந்தரநாச்சியார் புரம், சகோ.பெலிசியா-அக்கரபாளையம், சகோ.ஜரின் மேரி, சகோ. வெரோணிக்கா மேரி - இம்மாக்குலேட் ஜெனரலேட்-பாண்டி, சகோ.அற்புத மேரி-முதல் சேரி, சகோ. ரெஜினா ரோஸ் மேரி-முதல் சேரி, இ.இனியசான்ட்ரா-அணையேரி, சகோ. கிரேசியா மேரி-மதுரை, சகோ.ரொமானா-கழுகுமலை, இ.சலோமை-அணையேரி, சகோ. லீமா ராணி-சேலம், எஸ்.அருளானந்தம்-வெள்ளாண்டி வலசு, மதலேன் மேரி-வெள்ளாண்டி வலசு, சகோ.மேரி பிளாரன்ஸ்-பசுபதி கோவில், பி.சகந்தலா மேரி-வெள்ளாண்டி வலசு, இ.எல்வின் கெனத் ஜேசன், இ.இசையாஸ், இ. இருதய மேரி-அணையேரி, சகோ.தெரசா செபாஸ்டின்-அரிசி பாளையம், சகோ. நிர்மலா-என்.பஞ்சம்பட்டி, எம்.ஜெயராஜ்-காந்திகிராமம்-பசுபதிபாளையம், சகோ. செபஸ்டினா-மதுரை, செங்கோல் திரவியம்-மாரம்பாடி, ரெஜி ஆரோக்கிய செல்வி-மாரம்பாடி, சகோ.பென்னி-இருங்களூர், ஆ.ஞானமணி-மாரம்பாடி, எம்.ஆரோக்கியசாமி - கோட்டப்பாளையம், எஸ்.பாக்கியநாதன்-காரைக்கால், பேப்டிஸ்டா சேவியர்-ஆர்.எ.புரம்-சென்னை, பீட்டர் கிளாவர் மடம்-திண்டிவனம், எப்.ஜெசிந்தா-கொடுங்கால், சகோ.லாரன்ஸ் செல்வநாதன்-பீட்டர் கிளாவர் மடம்-திண்டிவனம், சகோ.தேக்ளா தெரசா-தரங்கம்பாடி, எ.கிளமென்டீன்-கோட்டுச்சேரி, ம.மோனிஷா-காலேஜ் நகர் விழுப்புரம், சகோ.லில்லி- எஸ்.எம்.எம்.ஐ..-கோக்குடி, சகோ.மேரி பபியோலா- கோக்குடி, ஒய்.ரோஸ்-சி.நம்மியந்தல், சகோ.பபியோலா-ஐ.சி.-கல்லடிப்பட்டி, சகோ.ஏஞ்சல் ரூபாவதி-ஐ.சி.- நெல்லியாங்குளம், வி.சுவக்கீன்-அரியாங்குப்பம், சகோ.இசபெல்லா மேரி-அலாய்சியஸ்-தூத்துக்குடி, சகோ.நேவிஸ்-பாளையங்கோட்டை, அ.புஷ்பம்-சாலைக்கிராமம், சகோ.ஜோதி-நல்லம்பிள்ளை, சகோ.அமலா ஜோதி-புரத்தாக்குடி, சகோ.மரி கபிரியேல்-குடந்தை, சகோ.ஜெயமேரி சி.ஐ.சி சிலுக்குவார்பட்டி, சகோ.லிபியா மேரி-திண்டுக்கல், சகோ.ஹெர்மனா மேரி-பெத்தனி-தூத்துக்குடி, சகோ.நித்தியானந்தம்-மதுரை, கே.எல். இஸபெல்லா லூர்துராஜன்-சி.நம்மியந்தல், சகோ.குளோரியோசா-சேலம், சகோ.லோரா மேரி-வடக்கன்குளம், மனோன்மணி ராஜன்-வடக்கன்குளம், சகோ.லூயிஸ் ஜெசிந்தா-திண்டுக்கல், ச. கமலம்-காஜாப்பேட்டை-திருச்சி, எ.சூசை அந்தோனி-திருமலாபுரம், சகோ.கத்ரீன்-மதுரை, ஹில்டா தாஸ்-முத்தியால்பேட்டை, ஜே.அமரா-வடக்கன்குளம், அல்போன்ஸ்-சிம்கோ ரோடு-திருச்சி, சகோ.ஆரோக்கிய செல்வி-வேளாங்கண்ணி, எஸ்.சந்தானம்-தேவராஜ நகர்-திருச்சி, பி.எம்.தாமசு-பழவந்தாங்கல், சகோ.ஜோசப்பா-கருங்குளம், சகோ.டெனிசா-மாஊ.ச.-உவரி, செப இயேசு-இலஸ்பேட்டை-பாண்டி, ஜே.சவரியம்மாள் ஜேம்ஸ்-மேட்டுப்பாளையம், சகோ.ஜோவிற்றா-சவேரியார்பாளையம், எஸ்.அன்னா தெரஸ்-எஸ்.ஆலங்குளம்-மதுரை, ஏஞ்சல்-மேட்டுப்பாளையம், ரெஜினா மேரி அம்புரோஸ்-வரதராஜன் பேட்டை, ஜோஸ்பின் மனோகர்-வடக்கன்குளம், சு.சீனியம்மாள்-தேவிபட்டணம், ஏ.ஜெஸ்டினா மேரி-கிண்டி-சென்னை, சகோ.மேரி வயோலா-அனுமந்தராயன் கோட்டை, சகோ.மேரி பாஸ்கல்-தஞ்சாவூர், சகோ.நம்பிக்கை-ராஜாவூர், பொன்னுமுத்து-சித்தந்தோப்பு, சகோ.செலின் தெரஸ்-ஆத்தூர்-திண்டுக்கல், சகோ.அல்போன்ஸ் மேரி-செக்ககுடி, பெயரில்லாதவர்-திருநெல்வேலி, சகோ.குழந்தை -வேங்கிக்கால், சகோ.ஆர்.ரோஸ்லின் மேரி-ஆத்தூர்-திண்டுக்கல்; ஜி.நிர்மலா - சகோ.லீமா- சகோ.ஏஞ்சல்-களியக்காவிளை, லூர்து பரஞ்சோதி-திருச்சி, சகோ.வித்யா-ஆலந்தலை, டி.ஜான் ஜோசப்-திருச்சி, சகோ.தெரசிட்டா-ஒரத்தநாடு-தஞ்சை, சகோ.ரெக்சலின் அவிலா செல்வி-பொன்மலை. எஸ். தர்சன் ராய்- பள்ளிக்கரணை; சகோ. லாரன்ஸோ, சகோ. சகாய லாரன்ஸ், சகோ. தார்சிஸ் மேரி- ஜெயங்கொண்டாம்; சி. எஸ்.எம்.ஜே. துரை- திருச்சி, சி. கஸ்பார்-இளையாங்கண்ணி, எம். லில்லிசாள்-அம்மாப்பேட்டை-தஞ்சை, சகோ. மேரி டொனேட்டஸ்-கூடல்நகர், எ. அல்போன்சா மேரி-நரணம்பாளையம், ஆசா விண்ணரசி-அருளம்பாடி, ஆர்.ஜி. பிரகாஷ்- வேளச்சேரி-சென்னை.

# விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி
# எசேக்கியேல் 32 - 48




**தயாரித்தவர்**

திருமதி பேப்டீஸ்டா சேவியர்

*நற்செய்திப் பணியாளர்*

*ஓய்வுபெற்ற ஆசிரியை*

*ஆர்.ஏ. புரம், சென்னை-28*

**பரிசுகள்**

குலுக்கல் முறையில் 4 பேருக்கு

பதில்கள் வந்து சேரவேண்டிய

**கடைசி நாள்**

17.03.2011

*அனுப்ப வேண்டிய முகவரி*

அருள்சகோதரி பெரேரா

TNBCLC, P.B. 10, திண்டிவனம்.

## இடமிருந்து வலம்

1.அங்கே ஆண்டவரை அணுகி ------ குருக்கள் உன்னத பலிப்பொருள்களை உண்ணுவர். 3. ------ இருபத்தைந்தாயிரம் முழம் நீளமும் பத்தாயிர முழம் அகலமும் உடையதாய் இருக்க வேண்டும். 8. பின்னர் அவர் என்னை ------ கரைக்கு அழைத்துச் சென்றார். 9. வாயிலின் ------ பத்து முழம், வாயிலின் புடைநிலைகள் ஒவ்வொரு பக்கமும் ஐந்து முழம் இருந்தன. 11. இது என் அரியணையின் ------, என் கால்மணைக்கான இடம். 13. நான் ------ வாக்குரைக்கையில் உராயும் ஒசை கேட்டது. 18. அவர்களுக்கு அரண் இல்லை, அடைக்கும் தாழ் இல்லை, வாயில் ------ இல்லை. 19. தலைவன் நுழைகையில் அவன் நுழைவாயிலின்------ மண்டபம் வழியாய் நுழைந்து, அதே வழியில் வெளிச்செல்ல வேண்டும். 21. அது இஸ்ரயேல் வீட்டார் அனைவர்க்கும் ------ இருக்கும்.

## வலமிருந்து இடம்

3. ------ நடுவில் ஆண்டவரின் தூயகம் இருக்கும். 4. ------ தலைவராகிய ஆண்டவர் இவ்வாறு கூறுகிறார். 5. யூதாவின் எல்லையருகே கிழக்குப் பகுதியிலிருந்து மேற்குப் பகுதி வரை நீங்கள் அர்ப்பணிக்க ------ சிறப்புப் பகுதி. 8. அவர்களுக்குக் குன்றினைச் சுற்றிய இடங்களை ------ கொடுப்பேன். 10. இத்துடன் '------' என்னும் பெயரில் ஒரு நகரம் இருக்கும். 13. இஸ்ரயேலின் மலைகள் பாழாய்ப்போம். அங்கே நடமாட்டம் ஏதும் -------. 17. "அழகில் நீ ------ மிகுந்தவள்? நீ கீழிறங்கி விருத்தசேதனம் இல்லாரோடு கிட." 20. எனவே அவர்கள் என் ------ வந்து திருப்பணி புரிய வேண்டும்.

## மேலிருந்து கீழ்

2. ஆண்டவரின் ------- கிழக்கு நோக்கிய வாயில் வழி கோவிலினுள் நுழைந்தது. 6. அதன் புகுமுக ------ வெளிமுற்றத்தை நோக்கியிருந்தது. 8. நான் உங்களுக்குப்

புதிய இதயத்தை அருள்வேன். புதிய ------------ உங்களுக்குள் புகுத்துவேன். 10. குருக்களின் ------ இடையிலுள்ள திறந்தவெளி இருபது முழமளவாய் கோவிலைச் சுற்றி இருந்தது.11. நான் என் மக்களாம் ------ என் திருப்பெயரை அறியச் செய்வேன். 12. அங்கு தெற்கு நோக்கிய வாயில் ஒன்று ------ . 13. 'அவை பாழாக்கப்பட்டு விட்டன; ------ தரப்பட்டுள்ளன' என்று நீ சொன்னாய். 14. ------ இந்த நாட்டை இஸ்ரயேலின் குலங்களுக்கு ஏற்பப் பங்கிட வேண்டும். 15. எந்தக் ------ கைம்பெண்ணையோ மணமுறிவு பெற்ற மங்கையையோ மணமுடித்தலாகாது.

## கீழிருந்து மேல்

4.------ கையை உனக்கெதிராய் நீட்டி உன்னைப் பாழிடமாகவும் வெற்றிடமாகவும் மாற்றுவேன். 6. இஸ்ரயேல் ------ களே! ஆண்டவரின் வாக்கைக் கேளுங்கள். 7. அதன் ------ சுற்றிலும் அரை முழமும் அதன் அடிப்பாகம் சுற்றிலும் ஒரு முழமுமாய் இருந்தது. 8. என் ஊழியன் தாவீது அவர்களுக்கு அரசனாய் இருப்பான். அவர்கள் அனைவருக்கும் ஒரே ------ இருப்பான். 11. அவர்கள் அவற்றை வெளிமுற்றத்திற்குக் கொண்டுபோவதன் மூலம் தூய்மை மக்களுக்குச் சென்று விடுவதைத் தவிர்க்க ------ செய்வர். 13. ------! ஒரு வாள் அவர்களைக் கொல்ல உருவப்பட்டுள்ளது. 16. உங்கள் வாள்களின் ------ நம்பிக்கை வைக்கிறீர்கள். அருவருப்பான செயல்களைச் செய்கிறீர்கள். 21. அவர்கள் அதிலிருந்து கொஞ்சமும் விற்கவோ, ------ மாற்றம் செய்யவோ கூடாது.

---

# பெப்ரவரி குறுக்கெழுத்துப் போட்டிக்கான விடைகள் (எசே)

## வலமிருந்து இடம்

| | | |
|---|---|---|
| 07. | உன்னை | 22:15 |
| 12. | காரணமாய் | 14:15 |
| 14. | கொம்பு | 29:21 |
| 15. | குருதி | 24:7 |
| 17. | வாழ்ந்திடு | 16:6 |
| 18. | விட்டு | 16:42 |

## இடமிருந்து வலம்

| | | |
|---|---|---|
| 01. | தங்கள் | 14:10 |
| 02. | எளியோரின் | 16:49 |
| 05. | வெறுத்து | 16:5 |
| 06. | வீட்டாருக்கு | 29:7 |
| 10. | இதயம் | 28:17 |
| 13. | கிடக்கும் | 30:7 |

## மேலிருந்து கீழ்

| | | |
|---|---|---|
| 02. | எட்டும் | 31:14 |
| 03. | பாவம் | 18:20 |
| 08. | பெற்றோரின் | 18:4 |
| 11. | ஆணை | 20:3 |
| 16. | செலவத்தினாலோ | 28:5 |

## கீழிருந்து மேல்

| | | |
|---|---|---|
| 04. | நிறைவுற்று | 16.14 |
| 06. | வீழ்ச்சிக்கு | 18:30 |
| 07. | உன்னைச் | 29:5 |
| 08. | பெறுங்கள் | 18:32 |
| 09. | குத்திக் | 28:9 |
| 10. | இடிபாடுகள் | 26:20 |
| 11. | காய்ந்து | 19:12 |

# 38-ஆம் ஆண்டு கோடை இசைப் பள்ளி 2011
## மே 1-28 ( 4 வாரங்கள்)

**இடம்**

சத்திய நிலையம்
201, கல்கி கிருஷ்ணமூர்த்தி சாலை
(L.B. Road) திருவான்மியூர்
சென்னை - 600 041

**கட்டணம்**

| | | |
|---|---|---|
| பயிற்சி | ரூ. | 600-00 |
| உணவு | ரூ. | 2140-00 |
| உறைவிடம் | ரூ. | 660-00 |
| **மொத்தம்** | **ரூ.** | **3400-00** |

01. இவ்விசைப்பள்ளி 1973-ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள், திருச்சியில் நடைபெற்ற தமிழக திருவழிபாட்டுக் குழுவால் பரிந்துரைக்கப் பட்டுள்ளது.

02. இப்பயிற்சி கலப்பற்ற கர்நாடக இசை கற்க விரும்புவோருக்கு மட்டுமே.

03. ஓராண்டுப் பயிற்சியை ஒரு மாதத்திலேயே அளிக்கும் இவ்வரிய இசைப்பள்ளி அனுபவமிக்க ஆசிரியர், ஆசிரியைகளால் நடத்தப்படுகிறது.

04. குரலிசை **கட்டாயப் பாடம்**. குரலிசையுடன் **துணைப்பாடமாக** வீணை, வயலின், மிருதங்கம் ஆகியவற்றுள் ஒன்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும். வயலின் கற்க விரும்புவோர் தாங்களே வயலின் கொண்டுவருதல் அவசியம். பெண்கள் துணைப்பாடமாக பரதநாட்டியம் கற்கலாம்.

05. ஹார்மோனியம் கற்பதற்கு இந்தப் பயிற்சியில் இடம் இல்லையென்றாலும், ஈராண்டுகள் கோடை இசைப்பயிற்சி முடித்த பின்பு, விருப்பப்படுபவர்களுக்கு மட்டும் ஓய்வு நேரங்களில் அதைக் கற்பதற்கு அனுமதி தரப்படும்.

06. மூன்று கோடை இசைப் பயிற்சி பெற்றுத் தேர்ச்சியடைபவர் தமிழக அரசின் முதல் நிலை (Lower Grade) இசைத் தேர்வுக்குத் தகுதியுடையவர் ஆவர்.

07. நான்கு கோடை இசைப் பயிற்சி பெற்றுத் தேர்ச்சி அடைபவருக்குப் பயனுள்ள சான்றிதழும், "**அருளிசைமணி**" என்ற விருதும் வழங்கப்படும்.

08. தமிழக அரசின் தேர்வுக்குச் செல்லாதவர்களுக்கும், விருப்பம் உள்ளவர்களுக்கும் (குறைந்தது 5 மாணவராவது சேர்ந்தால்) 5-ஆம் ஆண்டு சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும்.

09. கோடை இசைப்பயிற்சியில் சேர விரும்புவோருக்குரிய குறைந்த வயது 13.

10. பயிற்சி மே முதல் நாள் (ஞாயிற்றுக்கிழமை) முற்பகல் 11.00 மணிக்கு ஆரம்பிக்கும். மே 28-ஆம் நாள் (சனிக்கிழமை) பிற்பகல் முடிவடையும்.

11. விண்ணப்பம் வந்து சேர்வதற்குக் கடைசி நாள் மார்ச் 31.


தொடர்பு :

*கலைமாமணி சங்கீத வித்வான்*

**டாக்டர் பி.டி. செல்லத்துரை, சே.ச., M.A.. Ph.D.,**

**பெஸ்கி இல்லம், அஞ்சல் பெட்டி எண்-90,**

**கரூர் சாலை, திண்டுக்கல் - 624 001.**

**தொலைபேசி -0451 - 2431649 , அலைபேசி - 9487417445**

Regd No. TN/PMG (CCR)/31/09-11 & WP. No. 24

## கோடை விவிலியப் பள்ளி (VBS) மாநிலப் பயிற்சி

வாருங்கள் ! பங்கேற்போம் !!!

வளரும் குழந்தைகளில் அக்கறை கொண்ட விவிலிய ஆர்வாளர்களே, இவ்வாண்டு அட்டா VBS - 2011 க்கான மாநிலப் பயிற்சி முப்பணி நடுநிலையம், திண்டிவனத்தில் நடைபெறும். ஒவ்வொரு மறைமாவட்டங்களில் இருந்தும் 4-8 பேர் கலந்து கொள்ளலாம். தயவுகூர்ந்து பெயர்களை முன்கூட்டியே அனுப்பி வைக்கவும்.

நாள் : 12 - 13 மார்ச், 2011 (காலை 9 மணி (முதல்)
இடம் : TNBCLC, திண்டிவனம்

அன்புடன் அழைக்கும்
**அருள்பணி. இரா. மரிய டெல்லஸ்**
தமிழக விவிலியப் பணிக்குழு.

## விற்பனைக்கு ...

இளைஞர்களின் வாழ்வில் இறைவார்த்தையை அடிப்படையாகக் கொண்டு பயிற்சி தரவேண்டும் என்ற ஆர்வம் கொண்டவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு.

பெப்ரவரி 10, 2011-இல் வெளியிடப்பட்ட இளைஞர்களுக்கான பயிற்சி நூல் விற்பனைக்கு உள்ளது. இதன் விலை ரூ. 50/- (தபால் செலவு தனி; தமிழ் நாட்டிற்குள்- ரூ 10).

அருள்பணி. இரா. மரிய டெல்லஸ் அவர்களின் படைப்பில்

### "இளைஞர்களின் வழிகாட்டி தோபியா"

**நூலின் சிறப்பு:**

1. விவிலியத்தைப்பற்றி இளைஞர்கள் அறிய வேண்டிய செய்தித் துணுக்குகள்.
2. தன்னையும் பிறரையும் வாழ்வையும் புரிந்துகொள்வதற்குத் தேவையான அனைத்துச் செய்திகள்.
3. வாழ்வில் விவிலியத்தை அறிந்து தன்னைப் புரிந்துகொண்ட ஒவ்வொரு இளைஞரும் கொண்டிருக்க வேண்டிய நம்பிக்கை பற்றிய சிந்தனைத் தொகுப்புகள்.
4. செபிக்கும் முறைகளையும் பல்வேறு மாதிரி செபங்களையும் உள்ளடக்கியப் பகுதிகள்.
5. அறிவதை, புரிவதை, நம்புவதை, செபிப்பதை, வாழவேண்டிய வழிமுறைகளை எடுத்தியம்பும் பகுதிகள்.
6. இளைஞர்களின் கண்ணோட்டத்தில் தோபித்து நூலுக்குத் தமிழில் வந்த முதல் விளக்க நூல்.

**வாங்கிப் பயன் பெறுங்கள்!**

Edited by *Rev. Fr. R. Maria Dellus,* TNBCLC
Printed and Published by *Rev. Fr. D. Alphonse*
Manager, TNBCLC Press, Tindivanam 604 001 (04147 - 222177, 223177)